# மேஜர் கிண்ணி



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

- கஸ்ரோ

*R. Pathmanaba Iyer*
*27-B High Street*
*Plaistow*
*London E13 0AD*
*Tel: 020 8472 8323*

# மேஜர் கிண்ணி



- கஸ்ரோ

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

முதற்பதிப்பு : மார்கழி, 1992
வெளியீடு : வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

மறுபதிப்பு : மாசி, 1997
வெளியீடு : அனைத்துலகச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
அச்சுப்பதிப்பு : தமிழ் அச்சகம், பிரான்ஸ்

# அன்புக் கட்டளை

பேச்சுவாக்கில் கிண்ணி எழுதச் சொல்லிய – அன்புக் கட்டளையைச் சிரமேற்கொண்டே இச்சிறு நூலை நான் எழுத முயற்சித்துள்ளேன்.

கிண்ணியின் முரட்டுக்குணங்கள் மட்டும் தான் எல்லோரிற்கும் தெரியும். ஆனால் அவனது மறுபக்கத்தில் போரில் பட்டறிவுள்ளவனாக இருந்தான்; பழகுவதற்கு இனிமையானவனாகவும் நகைச்சுவையாகப் பேசக்கூடிய வனாகவும் இருந்தான்; நுணுக்கமான விடயங்களைச் செய்யக்கூடிய ஆற்றல் படைத்தவனாகவும் இருந்தான்.

ஒருமுறை உண்மை மனிதனின் கதை என்ற நூலை வாசித்த கிண்ணி, ஏன்.... எங்கட போராட்டத்தில் இதைவிடத் திறமான சம்பவங்கள் நடந்திருக்கு; இதுகளையெல்லாம் யாரும் எழுத மாட்டினமோ என்று என்னிடம் கூறி ஆதங்கப்பட்டான்.

தாயக விடுதலை வேள்வியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட மாவீரர்கள் ஒவ்வொருவருடைய சாதனைகள், தியாகங்கள் அவர்களது எண்ணங்கள் கற்பனைகள் எல்லாம் ஆவணங்களாக எழுத்தில் பொறிக்கப்பட வேண்டும் என அவன் ஆசைப்பட்டான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஒவ்வொரு களநிகழ்வும், அதற்குப் பின்னாலுள்ள கடின முயற்சிகளும், களத்திலுள்ள சூழ்நிலை, அங்குள்ள போராளிகளது மனநிலை போன்றவையெல்லாம் இலக்கியங்களாகச் செதுக்கப்பட வேண்டும் என விரும்பினான்.

என்னைப் பொறுத்தவரையில் பல சந்தர்ப்பங்களில் உயிர் நண்பனாக இருந்து என்னைக் காப்பாற்றியிருக்கிறான். நடை முறைப் போர்த் தந்திரங்களை நுட்பங்களைச் சொல்லிக் கொடுத்த ஆசானாக இருந்திருக்கிறான். எனது மன உணர்வுகளை எண்ணங்களை கற்பனைகளைப் பகிர்ந்துகொண்ட இனிய தோழனாக இருந்திருக் கிறான். கிண்ணியுடனான எனது நினைவுகளைச் சிறு நூலாக வடிக்க முயற்சி செய்துள்ளேன்.

நன்றி.

**' புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் '**

தமிழீழம்.
12. 12. 1992

அன்புடன்
வீ. மணிவண்ணன்.
(கஸ்ரோ)

# 1

இன்னும் விடியவில்லை.

இருள் படர்ந்து மெல்ல விலக எத்தனித்துக் கொண்டிருந்தது. தூரத்திலே ஆங்காங்கே சில சேவல்கள் தமது குரலை எழுப்பி விடியலுக்கு வரவேற்புக் கொடுத்துக் கொண்டிருந்தன.

அதிகாலை 4 மணி இருக்கும்.

ஏதோ சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்தேன். சற்றுத் தள்ளி படுக்கையில் இருந்த கிண்ணியைக் காணவில்லை. முதல் நாள் தான் வயிற்று நோவென்று மருந்தெடுத்து வந்தவன்.

தூரத்திலே இடிமுழக்கம்போல் எறிகணைகள் விழுந்து வெடிப்பதும் சூட்டுச் சத்தங்களும் கேட்டன.

"கோட்டையில் ஏதோ பிரச்சனை போல இருக்கு, மண்டைதீவு ஆமி வந்திட்டானோ" என்று கிண்ணி சொன்னபடியே முகாமுக்கு முன்னால் சென்று சத்தங்களை அவதானித்த வண்ணம் இருந்தான். இரு தினங்களுக்கு முன்பு தான் மண்டைதீவு இராணுவத்தினரை எதிர்கொள்ள பண்ணைப் பால றோட்டில் ஆர். பி. ஜி உடன் நின்றுவிட்டுத் திரும்பியிருந்தான் கிண்ணி.

"எனக்கெண்டால் வழக்கமாகக் கேட்கிற மாதிரித்தான் இருக்கு பேசாமல் படுங்கோ" என்று கூறிவிட்டு நான் ஒரு குட்டி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நித்திரைக்கு ஆயத்தமானேன். ஆனால் கிண்ணி உறங்கவில்லை. வெடிச் சத்தங்களால் ஈர்க்கப்பட்டு அதனைப் பற்றிச் சிந்தித்த வண்ணமே குட்டி போட்ட பூனை மாதிரி இருப்புக் கொள்ளாமல் உலாவித் திரிந்தான். விடிந்தவுடன் பூக் கன்றுகளுக்குத் தண்ணீர் விட்டுக்கொண்டிருந்த கிண்ணி " சத்தங்கள் வரவரக் கிட்டவாகக் கேட்குது. அதோட அகோரமாக அடிக்கிறாங்கள். ஏதோ பிரச்சனை போலக் கிடக்கு" என்று கூறிய பின்பு –

"எதுக்கும் பக்கத்து வீமன் முகாமில் போய் என்ன நடக்குது என்று கேட்டுக்கொண்டு வாறேன்" என்று சொன்னபடியே புறப்பட்டுப் போனான். எமது முகாம் கோட்டையில் இருந்து சற்றுத் தூரத்தில் ஒதுக்குப் புறமாக இருந்தாலும் தொடர்பு சாதனங்கள் இல்லாததாலும் என்ன நடைபெறுகின்றதென அறிய முடியாமல் இருந்தது.

பின்னேரமாகியும் கிண்ணி முகாம் திரும்பவில்லை. கோட்டையில் அதிகரித்த வண்ணம் உள்ள சத்தங்கள் எனக்குக் கிண்ணியின் இடத்தை உணர்த்தின. குளிக்கும் இடத்தைப் போய்ப் பார்த்தேன். கிண்ணி குப்பியை விட்டு விட்டுப் போயிருந்தது தெரியவந்தது. குப்பியை எடுத்துக் கொண்டு கோட்டையை நோக்கிப் போனேன் போகும் வழியெல்லாம் மக்கள் தத்தமது மூட்டை முடிச்சுக்களுடன் குடும்பம் குடும்பமாக யாழ். நகரத்தைவிட்டு அகன்று கொண்டிருக்கிறார்கள். அவ்ரோவும் உலங்குவானூர்தியும் மேலே சுற்றிக்கொண்டிருந்தன.

"கோட்டைக்கு ஆமி வந்துவிட்டான். ரவுணுக்கும் வரப் போகின்றான்" என்றெல்லாம் சனங்கள் பரபரப்பாகக் கதைத்தபடியே அகன்று சென்று கொண்டிருந்தார்கள். கோட்டை இராணுவ நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் முகாமான நீகன் முகாமுக்குப் போய் " கிண்ணி வந்ததோ " என்று கேட்டேன். அவர்களுக்கு எதுவும் தெரியவில்லை.

" முன்னுக்கு ஆள் நிற்குதோ இல்லையோ என்று கேட்டுச் சொல்லுங்கள் " என்று திரும்பவும் கேட்டேன். தொடர்பு எடுத்துக் கேட்டுவிட்டு " கிண்ணியண்ணா பொலிஸ் ஸ்ரேசனடியில் நிற்கிறார்." என்று வோக்கி வைத்திருந்த போராளி கூறினான். குப்பியை எப்படிக் கொண்டு போவது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது,

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



" இந்த நேட்டோ ரவுண்சுகளையும் இன்ரமீடியம் ரவுண்சு களையும் பொலிஸ் ஸ்ரேசனடியில் கொண்டுபோய்க் கொடுத்து விடு." என்று பொறுப்பாளர் ஒரு போராளிக்குக் கூறுவது தெரிந்தது. இரண்டு பெரிய பொதிகள்.

"ஒன்றை மட்டும்தான் தூக்கலாம் மற்றது தூக்குவதற்கு இன்னொரு ஆள் தேவை" என்று அந்தப் போராளி பதிலளித்தான்.

" நான் கொண்டு வாறன்." என்று கூறியபடியே பையொன்றைத் தோள் மீது அடித்துக்கொண்டு இருவரும் புறப்பட்டோம். அசோக் கொட்டேலுக்குப் போய் அதன் கீழுள்ள சாக்கடை வழியே பொலிஸ் ஸ்ரேசனடிக்குப் போன போது அங்கு முன் காவல் நிலையில் படு பிசியாக கிண்ணி நிற்பதைக் கண்டேன்.

"என்ன சொல்லாமல் கொள்ளாமல் வந்துவிட்டீர்கள்." என்று கேட்டேன்.

" ஆமி இறங்கிட்டான் என்னென்று இனி நிற்கிறது அது தான் வந்திட்டன். " என்றான் கிண்ணி.

இதே போலத் தான் இன்னுமொரு முறை அப்போது ஒரு தவறிற்கான தண்டனை காரணமாக முகாம் ஒன்றினுள் கிண்ணி முடங்கி இருந்தான். பலாலியில், ஆனையிறவில், தீவுப்பகுதியில் சண்டை என்ற செய்தி அடிபட்டது. போக முடியவில்லையே எனத் துடிதுடித்துப் போனான். தச்சன்காட்டுச் சந்தி காவலரண்களை அன்றிரவு எமது போராளிகள் தாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சண்டையின் போக்கைப்பற்றி வோக்கியில் கேட்டுக்கொண்டிருந்த கிண்ணி, எமது தரப்பில் இழப்புக்கள் அதிகமாக இருந்ததை அறிந்ததால் உடனே எம்-16 இனைக் கட்டிக்கொண்டு போர்க் களத்திற்குப் புறப்பட்டு விட்டான். இவன் அங்கு போன போது வீரச்சாவடைந்த போராளிகளை முன்னுக்கு இருந்து பின்னுக்கு எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் காயப்பட்ட நிறையப்பேர் கிடந்தனர். அவர்களை வைத்தியசாலைக்கு அனுப்ப வழியில்லாமல் இருந்தது.

அம்புலன்ஸ் எங்கே? அம்புலன்ஸ் எங்கே? என்று எல்லோரும்

தேடிக் கொண்டிருந்தார்கள். அம்புலன்ஸ் சாரதி அம்புலன்சைச் செலுத்திக் கொண்டு வந்த போது அவர் வெளிச்சத்தைப் போட்டுக் கொண்டு வந்ததால் அதை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து எறிகணைகளையும் போட்டனர். இதனால் அச்சாரதி அம்புலன்சை இடை நடுவில் விட்டு விட்டு ஓடி விட்டார். அவர் ஒரு பொதுமகன். வாகனமோட்டுவதற்காக அழைக்கப் பட்டிருந்தார். காயமடைந்தவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருந் தார்கள். கிண்ணி பார்த்தான் அந்த நேரத்தில் இதுதான் முக்கியம் என்று பட்டது. துப்பாக்கிச் சூடுகளுக்கு மத்தியிலேயே மெது மெதுவாக அம்புலன்சைக் கொண்டு வந்து 4,5 பேராக பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டுபோய் இறக்கினான். இவ்வாறாக காயமடைந்த முழுப் போராளிகளையும் பின்னால் உள்ள முதலுதவி இடத்திற்கும் பின்பு மருத்துவ மனைக்குமாக இரவு முழுவதும் ஓடித்திரிந்தான். மறுநாள் பின்னேரம் நான் கிண்ணியின் இடத்திற்குப் போனேன்.

" நேற்று நான் சண்டைக்குப் போனனான் தெரியுமா" என்று கிண்ணி சொன்னான். நான் திடுக்கிட்டேன் ஏனெனில் அந்த முகாமை விட்டு கிண்ணியை அனுமதி இல்லாமல் வெளியேற வேண்டாம் என்ற உத்தரவு இருந்தது. நான் பேசாமல் இருப்பதைக் கண்ட கிண்ணி,

" சண்டைக்குப் போனது என்பதற்காக யாரும் தண்டனை தந்தால் நான் சந்தோசமாக ஏற்றுக்கொள்வேன்" என்று கூறியவன் சிரித்தான் பின்பு,

" அங்கே நான் போகேக்கை சண்டை முடிஞ்சு போயிட்டுது. பார்த்தால் காயப்பட்ட பொடியள் நிறையப் பேர் இருந்தார்கள். பிறகென்ன அம்புலன்ஸ் எடுத்து ட்ரைவர் வேலை பார்த்தேன்" என்றான் மனநிறைவுடன்.

இதுதான் கிண்ணி; எங்கு சண்டை நடக்கிறதோ அங்கு போகத் துடிப்பவன்.

" அடிக்க வேண்டும்; ஆயுதங்கள் எடுக்க வேண்டும்" இதுதான் அவனது இலட்சிய வெறி. அவன் எத்தனை தரம் போரில் காயப்பட்டான் என்று எண்ணிச் சொல்வது கடினம். இடது பக்கம் உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரைக்கும் இவன் காயப்படாத இடம் இல்லை. கிண்ணி சேட்டைக் கழற்றினால் அவனது வீரத்தழும்புகளை எண்ணி முடிக்க அரை நாள் தேவை.



# 2

முதன்முதல் கிண்ணியை நான் சந்தித்தது இன்னும் எனக்குப் பசுமையாக நினைவில் நிற்கின்றது. இந்திய இராணுவச் சிறையில் 17 மாதங்களைக் கழித்துவிட்டு அப்போது தான் விடுதலையாகி இருந்தேன். ஒருவருடனும் கதைக்காது முகாமின் ஒதுக்குப்புற தோட்ட மூலையொன்றில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்தேன்.

" அண்ணை சுகமாயிருக்கிறியளோ?" என்று கேட்ட வண்ணம் வந்தவரைப் பார்த்தேன். மெல்லிய கறுத்த நெடுத்த உருவம். வலது கையில் சிறிய பையொன்று இருந்தது. கண்கள் துறுதுறு வென்று என்னை ஆழம் பார்த்தன. உதட்டில் நட்புணர்வுடன் ஒரு சிரிப்பு மேல் இழுத்த தலை சாரமும் சேட்டும் அணிந்திருந்தவர் தோழமையுடன் எனக்குப் பக்கத்தில் வந்தமர்ந்தார்.

" என்னைத் தெரியவில்லையோ?" என்று கேட்க, நான் திரும்பவும் பார்த்துவிட்டு, " எங்கோ பார்த்த முகம் மாதிரி இருக்கிறது, சரியாகத் தெரியவில்லை என்று இழுத்தேன்.

" நான் ஈசுவின் தம்பி கிண்ணி" என்றான்.

" ஈசுவின் தம்பியோ?"

நானும் ஈசு என்கின்ற கிண்ணியின் மூன்றாவது தமையனும் ஒன்றாகப் படித்தவர்கள். கிண்ணியின் வீட்டுக்கு, இயக்கத்திற்கு வருவதற்கு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

முன்பு எத்தனையோ தடவைகள் நான் போயிருக்கிறேன். அப்போது கிண்ணி சிறிய பையனாக இருந்தவன். நான் சரியாகக் கவனிக்கவில்லை. 6 வருடங்களின் பின்பு பார்க்கும் போது நிறைய வித்தியாசங்கள்.

" என்ன செய்யிறியள் " என்று கேட்டேன்.

" சும்மா தான் இருக்கிறேன் " என்றான் கிண்ணி. கிண்ணி இயக்கத்தில் இருப்பது எனக்குத் தெரியாது. முல்லைத்தீவு நகரில் நடந்த சண்டையில் இந்திய இராணுவத்தின் 60 எம். எம் எறிகணையினால் காயப்பட்டு சாகும் தறுவாயில் வல்வெட்டித்துறைக்கு வந்த தென்றோ, டொக்ரர் அன்ரி கிண்ணியைக் காப்பாற்றி இந்தியாவுக்கு அழைத்துச் சென்று அவனுக்கு மறு உயிர் கொடுத்ததோ எனக்குத் தெரியாது.

" ஏதாவது படிச்சுக் கொண்டிருக்கிறியளோ அல்லது தொழில் பார்க்கியளோ ?" என்று நான் விடாது கேட்டேன்.

" இடைக்கிடை இந்தியா பிஸ்னஸ் செய்கிறனான். " என படுசீரியசாக கிண்ணி கூறினான். இந்தியாவில் கிண்ணி அறுவை சிகிச்சை முடித்துக்கொண்டு தற்போதுதான் நாடு திரும்பியதும் எனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

சில நாட்களின் பின் தீவகப் பகுதிக்கு அரசியல் வேலை செய்வதற்காக நான் அனுப்பப்பட்டேன். அப்போது ஜேம்ஸ் தீவக பொறுப்பாளராக பொறுப்பெடுப்பதற்காகச் சென்றார். அவருடன் நானும் வானில் போனபோது அந்த வானை ஓட்டிக் கொண்டு போனது கிண்ணி. நான் கிண்ணியை ஆச்சரியமாகப் பார்த்தேன். கிண்ணி என்னைப் புரிந்துகொண்டவனாகச் சிரித்தான்.

" ஜேம்ஸ் அண்ணை ! கஸ்ரோ அண்ணைக்கு நான் இயக்கம் என்று தெரியாது... " என்றான். ஜேம்சும் சிரித்துவிட்டு

" கிண்ணி தான் தீவில் எனக்கடுத்த பொறுப்பாளர், அதாவது பிரதித் தளபதி " என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார். அதற்குப் பிறகு தான் கிண்ணியின் வரலாற்றை அறிந்து கொண்டேன்.



சாதாரண போராளியாக ஆரம்பித்து சண்டைகளில் தனது திறமையைக் காட்டி படிப்படியாக வளர்ந்தவன் இவன் இயல்பாகவே கிண்ணி ஒரு ஆவேசமான போராளி. மேஜர் பசிலனின் வளர்ப்பில் சண்டையில் இவன் ஒரு பாயும் புலியாக மாறியதில் ஆச்சரியமில்லை. காட்டுக்குள் இருந்த போது தலைவரின் பாசறையில் இவன் நிறையக் கற்றுக்கொண்டான். காடு இவனை அனுபவம் வாய்ந்த ஒரு போராளியாக்கியது. இவனது ஆரம்பச் செயற்பாடுகள் அரசியல் வேலையாகவே இருந்தன. மேஜர் ஜேம்ஸ் 83, 84 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் வடமராட்சிப் பகுதியில் அரசியல் வேலைத் திட்டங்களைச் செய்து கொண்டிருக்கின்றபோது அவனுக்குத் துணையாக நின்றவன் கிண்ணி. கிண்ணியை இயக்க வேலைகளில் படிப்படியாக ஈடுபட வைத்து பின்பு முழுநேரப் போராளியாக்கிய பெருமை மேஜர் ஜேம்சுக்கே சேரும்.

வீரம் விளைந்த வல்வை மாநகர் பெற்றெடுத்த அருந்தவப் புதல்வன் கிண்ணி. கந்தசாமித்துரை தம்பதிகளின் நான்காவது மகனாகப் பிறந்த இவன் சிறு வயதிலேயே கல்வியில் கெட்டிக்காரனாக விளங்கினான். ஹாட்லிக் கல்லூரியில் உயர் வகுப்பில் கணிதம் படித்துத் தனது திறமையினை வெளிப்படுத்தினான். இவனது சிறு பிராயத்திலேயே தகப்பனார் இறந்ததால் வீட்டில் குடும்ப நிலை கஸ்டமாகியது. குடும்ப நிலையை உணர்ந்து கிண்ணி செயற்பட்டான். தனது படிப்புக்கு மத்தியிலும் சிறுசிறு வேலைகள் செய்து வந்தான். கோழிகளை வளர்த்து அதன் மூலம் வீட்டைக் கவனிக்கும் பணியினையும் செய்தான்.

இவனது இரண்டாவது அண்ணன் 1983 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்துகொண்டதைத் தொடர்ந்து குடும்ப பாரம் இவனை அழுத்தியதால் ஆரம்பத்தில் வீட்டிலிருந்த வண்ணமே இயக்க வேலைகளில் ஈடுபட்டான். மேஜர் ஜேம்ஸ் பயிற்சிக்காகப் போனதைத் தொடர்ந்து கிண்ணி வடமராட்சியில் இயங்கி வந்த எமது இயக்க சவர்க்காரத் தொழிற்சாலையில் பணியாற்றினான். அங்கு சிறப்பாகச் செயற்பட்டதால் வன்னிப்பகுதியில் சவர்க்காரத் தொழிற்சாலையினை ஆரம்பிப்பதற்காகச் சிறிது காலம் வன்னியில் நின்றான். அதன் பின்பு கொமாண்டோ பயிற்சியினை முடித்துக் கொண்டு சிறிது காலம் வல்வை இராணுவ முகாமினைச் சுற்றியுள்ள காவலரண்களில் காவல் புரிந்தான். இயக்க வேலைகளில் ஈடுபடும் இயந்திரப்படகுகளைக் கவனிப்பதற்காக வடமராட்சி கிழக்குப் பகுதியில் " ஒப்பரேசன் லிபரேசன் " வரையும் கடமையாற்றினான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 3

கோட்டைக்குச் சென்ற நான் பையினை இறக்கி வைத்து விட்டுக் கிண்ணியிடம் போனபோது; அங்குள்ள நிலைமைகளை எனக்கு விளங்கப்படுத்தினான். பொலிஸ் விடுதிக் கட்டிடங்களுக்குள் வந்த பவள் வாகனம் புலிகளின் அடியில் நொருங்கிக் கிடப்பதையும் எமக்கும் கோட்டை இராணுவக் காவாலரண்களுக்குமிடையில் வெட்ட வெளியில் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டுச் சடலங்களாகக் கிடப்பதையும் கண்டேன். அதில் கிடந்த ஆயுதங்களைக் காட்டி “இன்று இரவு எப்படியும் எடுக்க வேண்டும்” என்று கிண்ணி கூறினான்.

இரவும் வந்தது. பல போராளிகள் முயற்சி எடுத்தும் அன்று ஆயுதங்கள் எடுக்கப்படவில்லை. இராணுவத்தினர் இறந்து கிடந்த இடம் கோட்டை வாசலுக்கு முன்பாக உள்ள வெளி, அதை நோக்கி இராணுவம் சுட்டால் பதுங்குவதற்கு எது விதமான பாதுகாப்பும் கிடையாது. அத்துடன் எமது ஜொனி கண்ணி வெடிகள் ஆங்காங்கே விதைக்கப்பட்டிருந்தன. அவற்றை வைத்தவர்கள் சிலர் வீரச்சாவைத் தழுவியதால் அவை வேறு அச்சுறுத்தல்களாக இருந்தன.

அன்று இரவு கிண்ணியும் வேறு சில போராளிகளும் ஆயுதங்களை எடுப்பதற்கு முயன்றனர். ஆனால் இராணுவம் சகட்டு மேனிக்குச் சுட்டதில் அப்பகுதிக் காவலரணுக்குப் பொறுப்பாக இருந்த போராளி காயமடைந்ததால் வேறு முயற்சி எடுக்கவில்லை. இதனைத் தொடர்ந்து இக்காவலரண் பகுதிக்கு கிண்ணி பொறுப்பாக்கப்பட்டான்.

“எப்படியும் இந்த ஆயுதங்களை எடுத்துக் காட்டுகிறேன்.”



என்று கூறிய கிண்ணி மறுநாள் பின்னேரம் போல என்னை வரச்சொல்லிவிட்டுதான் அங்கு நின்றுகொண்டான். மறு நாள் பின்னேரம் நான் போன போது முன்னுக்குப் போவற்கு கிண்ணி தயாராக இருந்தான். கூடவே மேஜர் கணேஸ், லெப். ரகீம் உட்பட நான்கு போராளிகளும் ஆயத்தமாக இருந்தார்கள்.

“என்ன மாதிரி இண்டைக்கு என்று கேட்டேன்.”

“இருட்டட்டும் கொஞ்சம் பொறுங்கோ” என்று கூறியபடியே யார் யார் முன்னுக்குப் போவது என்று போட்டி போட்டார்கள். இறுதியில் கிண்ணி முன்னுக்குப் போவதற்கு 6 பேரைத் தீர்மானித்தான்.

“நானும் வாறன்” என்று கிண்ணியிடம் அனுமதி பெற்றுக் கொண்டேன் வேறு சில போராளிகளை அழைத்து,

“எங்களுக்கு ஏதும் பிரச்சனை என்றால் எங்களை வெளியில் எடுப்பதற்கு நீங்கள் எல்லோரும் ஆயத்தமாக இருக்க வேண்டும்” என்று கூறி, அவர்களைக் காவலரண்களில் ஆயத்தமாக நிற்கச் செய்தான்.

“நாங்கள் தான் முன்னுக்குப் போறம் மாறிச் சுடவேண்டாம்” என்று கூறும்படி சில போராளிகளை அழைத்து நூலகம், துரையப்பா விளையாட்டரங்கம் அருகிலுள்ள பொலிஸ் கட்டிடம் ஆகியவற்றுள் உள்ள போராளிகளுக்கும் அறிவிக்கும் படி கூறினான்.

கோட்டை முகாமின் இராணுவ மதில்களில் இராணுவத்தின் சிறு அசைவு தெரிந்தாலே சுட்டு வீழ்த்துவதற்கென எம்மவர்கள் விழியுறங்காது காத்திருந்த நேரம், மெதுவாக இருட்டிக்கொண்டு வந்தது அதை இரவு என்றும் சொல்ல முடியாது பகல் என்றும் சொல்ல முடியாது.

“இதுதான் சரியான நேரம் வெளிக்கிடுங்கோ” என்று கூறியவாறு கிண்ணி முதலில் நடக்கிறான். கடற்கரைப் பக்கமாக உள்ள பொலிஸ் நிலைய கட்டிடத்திற்குள்ளால் வெட்டப்பட்ட அகழி வழியால் நாம் போய்க் கொண்டிருக்கிறோம். உடைந்த கட்டிடங்களும் கற் குவியல்களும் தாறு மாறான மரச்சட்டங்களும் இரும்புக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கேடர்களும் நீட்டிக் கொண்டிருந்தன. மண்டைதீவுக் கடலில் நின்று விடாமல் அடித்துக் கொண்டிருந்த பீரங்கிப்படகுகள் இரண்டும் அப்போது தான் ஓய்ந்திருந்தன. கோட்டையிலிருந்து இராணுவமும் தேடொளி வெளிச் சத்தைப் பாய்ச்சுவோமா விடுவோமா என்று யோசித்துக் கொண்டிருந்தது.



''இனிமேல் ஒருத்தரும் சத்தம்போடக் கூடாது மெதுவாக வாருங்கோ'' என்று மெதுவாக எல்லோருக்கும் எச்சரிக்கிறான். எமது முன்பக்கக் காவலரணில் உள்ளே போராளிகளைக் கூப்பிட்டு,

'' நாங்கள் முன்னுக்குப் போறம் கவனமாகப் பாருங்கோ'' என்று கூறி விட்டு பொலிஸ் நிலையக் கட்டிடத்தின் வலது புறமாக உள்ள வாசலொன்றால் கிண்ணி முதலில் வெளியே சென்றான். அதனைத் தொடர்ந்து எல்லோரும் மெதுவாக முன்னே றினோம்.

கோட்டையிலிருந்து வெளியே வந்த பவள் கவசவாகன மொன்று எம்மவர்களிடம் அடி வாங்கி உடைந்து கிடப்பதைக் கண்டேன். தகரங்களும் கற்குவி யல்களும் கட்டிடச் சிதைவு களுமாக நாம் போகும் பாதையில் பரவிக் கிடந்தன. இதற்குள் தான் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்தன என்று சொன்னார்களே என்ற நினைவு வந்தவுடன் எனது இருகால்களும் கூசின. முன்னுக்குப் பார்த்தேன். கிண்ணியும் கணேசும் எதனையும் பொருட்படுத்தாது சென்று கொண்டிருந்தார்கள். இவர்கள் இருவரும் போன பாதச்சுவட்டிலேயே நான் மெது மெதுவாக அடி எடுத்து வைத்தேன். ஏற்கெனவே நாங்கள் போன பாதையில் கண்ணி வெடிகள் இல்லை என்பதை, மைன்ஸ் வைத்தவர்கள்



மூலம் கிண்ணி அறிந்து கொண்டது எனக்குத் தெரியாது கோட்டை வாயில் சுவரிலிருந்து 30 யாருக்குள்ளாக இருந்த வெட்ட வெளியினை நாம் போய் அடைந்தோம். கோட்டையைப் பார்க்கும் போது நூறு பேருக்கு மேலான புலிகளை விழுங்கி இன்னும் விழுங்குவதற்கு ஆயத்தமாக உள்ள பூதம் மாதிரி இருந்தது. மறுபுறம் மண்டைதீவிலிருந்து அடித்த பேய்க்காற்று ஊ.... ஊ.... என்று சப்தமிட்டு வெருட்டியது. போதாக் குறைக்கு இறந்த இராணுவத்தினர் ஒவ்வொருவரும் வெயிலில் கிடந்து ஊதிப் பெருத்து இராட்சதன் மாதிரி இருந்தார்கள். இவையெல்லாம் சில நொடிகள்தான்.

'' இந்த ரைபிளை பின்னுக்கு அனுப்புங்கோ'' என்று மெல்லக் கிசு கிசுத்தபடியே, கிண்ணி ஒரு ரைபிளை எனது கையில் திணித்தான். சில நிமிட நேரங்களில் பல ஆயுதங்களை எடுத்துப் பின்னுக்கு அனுப்பிவிட்டோம்.

'' போதும் இனி மினைக்கெட ஏலாது; எல்லோரும் பின் வாங்குங்கோ'' என்று கிண்ணி ஒவ்வொருத்தராக கிசுகிசுத்த படியே பின்னால் அனுப்பினான். மயான அமைதி. ஆயுதங்கள் எடுத்த குதூகலம் அடியெடுத்தபடியே திரும்பினோம். எமது நிலைகளுக்கு வரும்வரையும் முள்ளந்தண்டு கூசியது. எம்மைப் பதம் பார்ப்பதற்காகவே என்று வைக்கப்பட்டிருந்த எதிரியின் இயந்திரத் துப்பாக்கிகள் விழித்துக் கொள்ளவேயில்லை. பத்திரமாக வந்து சேர்ந்தோம். ஓரே குதூகலம். எமது குதூகலம் காவலரணில் நின்ற எல்லாத் தோழர்களையும் பற்றிக்கொண்டது. ஆயதங்களும் வேறு சில பொருட்களும் எடுக்கப்பட்டிருந்தன. எல்லாவற்றையும் சரிபார்த்த கிண்ணி என்னையும் இன்னும் இரு போராளிகளையும் யாழ். மாவட்ட தளபதியாக இருந்த பானு அண்ணையிடம் போய்ச் சொல்லுமாறு கூறினான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## 4

எனக்கு முகாமில் பகல் வேலைகள் இருந்தன. அதனைச் செய்துகொண்டே ஒவ்வொரு நாளும் மாலை நேரம் கிண்ணியின் இடத்திற்குப் போவதை வழக்கமாகக் கொண்டேன். இரு நாட்களின் பின் போன போது

“ஒரு எல். எம். ஜி ஒன்று முன்னுக்கு விழுந்து கிடக்கிறது அண்டைக்கு அதைக் கவனிக்காமல் வந்து விட்டோம்” என்றான் கிண்ணி.

“எப்படியும் அதை நான் எடுக்கிறேன். இதில் என் உயிர் போவதானல் கூட எனக்குக் கவலை இல்லை ”

தீர்க்கமாகக் கிண்ணி கதைத்தான்.

“ இந்த எல். எம். ஜி. யை எடுத்தால்தான் என் சபதம் நிறை வேறும்” என்று முடித்தான்.

“ சபதமா? என்ன...” வியப்பு மேலிட புருவத்தை உயர்த்திப் பார்த்தேன்.

“ படீர் படீரென” அப்போது பீரங்கிப் படகிலிருந்து குண்டுகள் நாங்கள் இருந்த பொலிஸ் நிலையத்தைத் தாக்கின. எமக்கு மேலே உள்ள கட்டிடங்கள் உடைந்து விழுவதும் அதனைச் சுற்றிப் புகை கிளம்புவதுமாக இருந்தன. போராளிகள் எல்லார் மீதும் கட்டிடச்



சிதறல்களும் தூசுகளும் அப்பிக் கொண்டிருந்ததை என்னால் அவதானிக்கமுடிந்தது. குண்டுச் சிதறலொன்று சிதறிப் பறந்தது. “ தலையைக் கீழே பதியுங்கோ ” என்று கிண்ணி உரக்கச் சத்தமிட்டதைத் தொடர்ந்து தலையைக் குனிந்து தலையைக் காப்பாற்றிக்கொண்டேன்.

இதனை எழுதிக்கொண்டிருக்கும் போது தான் எனக்கு இன்னுமொரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. இதே போலத்தான் சென்ற வருடம் மன்னாரில் மடுவை நோக்கி வந்த இராணுவத்தை பரப்புக்கடந்தானில் எமது போராளிகள் மறித்து அடிபட்டுக் கொண்டிருக்கும் போது இதேபோல ஒரு நிலை ஏற்பட்டது. கடந்த 5 நாட்களாக சரியான நித்திரையின்றி குளிப்பின்றி மன்னார் பரப்புக்கடந்தானில் நாம் நின்றிருந்தோம். கடைசி நாளன்று ஆமி வெளிக்கிடுவதற்கு முன்பாக ஆயத்தங்கள் செய்வது தெரிந்தது. நாங்கள் பதுங்கு குழியொன்றினுள் இருந்து இராணுவத்தை அவதானித்துக் கொண்டிருந்தோம். இராணுவம் முன்னேற முற்பட்ட போது எமது பக்கத்திலிருந்த எல்.எம். ஜி. கள் முழங்கின. அதனைத் தொடர்ந்து இராணுவம் ரவை மழையைப் பொழிந்தது. நாம் ரவைகளை அடிப்பதுபோல் எதிரியின் ஆர். பி. ஜி எறிகணைகள் எம் தலைகளுக்கு மேலாகச் சென்றன. சில எறிகணைகள் நிலமட்டத்தோடு வந்து அருகிலுள்ள பிட்டிகளில் பட்டு மேற் கிளம்பி வெடித்தன. இரண்டு உலங்குவானூர்திகள் வானத்தில் வட்டமிட்டு துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் இருந்தன. அதிகாலையிலிருந்து பொம்மர்களும் அவ்ரோக்களும் சகடையும் மாறிமாறி எமது அரண்களை நோக்கிக் குண்டு போட்டதில் நாம் அனைவருமே புழுதி மழையில் குளித்துக் கொண்டிருந்தோம். முகங்களில் புழுதிபடிந்து உருமறைக்கப்பட்டு இருந்தோம். ஒரு பதுங்குகுழிக்குள் கிண்ணியும் நானும் இரு போராளிகளும் இருந்தோம்.

“ கஸ்ரோ அண்ணை நீங்கள் தலையைக் குனியுங்கோ நான் பார்க்கிறேன் ” என்று நிமிர்ந்த கிண்ணியின் தொப்பியைத் துளைத்துக் கொண்டு ரவுன்ஸ் சென்றது. சற்றுப் பிறகு எமது திறந்த பதுங்கு குழிக்கு ஒரு அடிக்கு மேலாக ஆர். பி. ஜி. எறிகணை ஒன்று சீறிப்பாய்ந்து சென்றது. இவை மட்டுமல்ல இன்னும் பல சந்தர்ப்பங்கள் சண்டைக்கென இருவரும் ஒன்றாகச் சென்ற போது எனக்குப் பாதுகாப்புக் கொடுத்து தன்னை ஆபத்திற்கு உட்படுத்தியிருக்கிறான் கிண்ணி.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

" என்னுடைய அண்ணர் முரளியைத் தெரியும்தானே?" இது கிண்ணி.

" ஓம் " என்றேன் .

" மயிலியதனைச் சண்டையில் காயப்பட்டு வல்லையில் ஹெலி அடிச்சு வீரமரணமடைந்தவர் " என்று கூறி நிறுத்தியவன் " சண்டையின் போது அவர் ஒரு எல். எம். ஜி. வைத்திருந்தவர். காயப்பட்டவுடன் அருகிலிருந்த இன்னுமொரு போராளியிடம் கொடுத்தார். அப்போராளியும் காயப்பட்டு எப்படியோ அந்த எல். எம். ஜி. எதிரியினால் கைப்பற்றப்பட்டு விடுகிறது. அதைக் கேள்வியுற்ற அன்றே நான் ஒரு உறுதி எடுத்துக் கொண்டேன். அதாவது அண்ணருக்காக எல். எம். ஜி. ஒன்றை எதிரியிடமிருந்து இயக்கத்திற்கு எடுத்துக் கொடுக்க வேண்டுமென்று" கிண்ணியின் கதையில் நிதானமும் உறுதியும் ஆவேசமும் இருந்தன.

" ஏன் நீங்கள் நெடுங்கேணியிலும் குமுழமுனையிலும் அடிச்சு பிறணெல்லாம் எடுத்தனீங்களெல்லோ " என்றேன்.

" அது இந்திய இராணுவத்திடமல்லோ சிங்கள இராணு வத்திடம் தான் எடுக்கணும். இப்ப அதுக்கு நல்ல சந்தாப்பம்."

சற்று நேரம் மௌனம் நிலவியது.......

"இன்னும் ஒருக்கா வடிவாகப் பார்த்துவிட்டு நாளைக்கு இறங்குவம்" என்றான் கிண்ணி.

பானு அண்ணையிட்ட இரவுப் பார்வை சாதனத்துக்கு சொல்லி இருக்கிறேன். வந்த உடனே வேலையைத் தொடங்கிறன்.

மறுநாள் மாலை மீண்டும் யார் முன்னுக்குப் போவது என்ற போட்டி.

" அண்ணா நான் அதை எப்படியும் எடுக்க வேண்டும் " இது கிண்ணி...



" இல்லை நான்தான் அதை எடுக்கிறது " இது இன்னொரு போராளி.

" சரி இரண்டு பேரும் போவம். யார் முதலில் எடுக்கிறது என்று பார்ப்பம் " என்றான் கிண்ணி முடிவாக.

இது ஒன்றும் சுலபமான காரியமல்ல. இவர்கள் போகுமிடம் கோட்டை வாசல். ஆமி கண்டால் காப்பெடுக்க இடமுமில்லை. எமது பாதுகாப்பான இடத்திற்கு வருவதற்கிடையில் அவன் முதுகில் கோலம் போட்டு விடுவான். இருவருமே ஓட்டப் பந்தயத்திற்குத் தயாராவது போல ஆயுதங்களையும் கோல்சரையும் கழற்றி வைத்தார்கள்.

" கிண்ணி நீங்கள் இரண்டு பேரும் துப்பாக்கி இல்லாமல் போறியள் நான் துப்பாக்கியோடு கூட வாறன். எதுக்கும் பாதுகாப்பாக இருக்கட்டும்." என்றேன் நான். இன்னுமொரு போராளியும் துப்பாக்கியுடன் வர நால்வரும் எமது காவலரண்களைக் கடந்தோம். நான் சில அடிகள் வைப்பதற்கிடையில் ஓடும் சத்தமொன்றும் அதனைத் தொடர்ந்து...

எடுத்துப்போட்டன் என்ற கிண்ணியின் குரலும் எனக்குக் கேட்டது. கிண்ணியுடன் போட்டிபோட்ட போராளி எல். எம். ஜி. இன் பட்டைப் பிடித்து இழுத்தான். கிண்ணி விடவில்லை. இருவரும் சில நொடிகளுக்கு இழுபறிப்பட்டனர். இவர்கள் போட்ட சத்தத்தினால் என்ன நடக்குமோ என்று திடுக்கிட்டேன். மறுகணம் இருவரும் கட்டிப் பிடித்துக்கொண்டு எல். எம். ஜி. இனை உயர்த்திப் பிடித்து உற்சாகத்துடன் பாய்ந்து வந்தார்கள்.

" பார்த்தியா நான் உன்னோடு போட்டி போட்டதால் தானே நீ ஓடிப்போய் எல். எம். ஜி. யை எடுத்தனி. இல்லாட்டி அதிலே போய்த் தடவிக் கொண்டிருக்க அவன் வெடி வைத்திருப்பான் " என்று கிண்ணியைப் பார்த்துச் சொன்னான் அந்தப் போராளி.

எப்படியோ எல். எம். ஜி. எடுத்த குதூகலம் எங்கள் எல்லோரையும் தொற்றிக்கொண்டது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 5

குறும்பு என்றால் கிண்ணி; கிண்ணி என்றால் குறும்பு என்று கூறலாம். கிண்ணியும் மேஜர் சொனியும் சேர்ந்தால் அல்லது கிண்ணியும் ஜேம்சும் சேர்ந்தால் அல்லது இந்த மூவரும் சேர்ந்தால் பிடிக்கவே இயலாது.

காட்டுக்குள் ஒருமுறை ஜேம்ஸ் ''கால்கஸ்ரோ'' என்ற கனரக ஆயுதத்தை வைத்திருக்க, அதற்கு உதவியாளனாக கிண்ணி இருந்த காலம். அப்போது பொருட்கள் மிகவும் தட்டுப்பாடாக இருந்தன. ஜேம்சுக்கு இனிப்பு என்றால் உயிர். இதனால் இருவரும் கால் கஸ்ரோவுக்குள் பிஸ்கட் குளுக்கோஸ் சீனி என்று போட்டு வைத்திருந்தார்கள். தேவையான நேரத்தில் எடுத்துச் சாப்பிடுவார்கள். இது எப்படியோ அந்த முகாம் பொறுப்பாளரின் காதிற்கு எட்டி விட்டது. இவர்களது கால்கஸ்ரோவினைச் சோதனை பண்ணுவதற்காகப் பொறுப்பாளர் விரைந்து வந்துகொண்டிருந்தார்.

''ஜேம்ஸ் உன்னுடைய கால் கஸ்ரோ எப்படி இருக்கு'' என்று கேட்டவாறே, ''துப்பரவாக வைத்திருக்கிறாயோ பார்ப்பம்'' என்று கூறியபடி மூடியினைக் கழற்றினார். உள்ளே ஷெல் லோட் பண்ணியிருந்தது. திடுக்கிட்டுப்போனவர்,

''என்னடாப்பா ஷெல்லை லோட் பண்ணி வைச்சிருக்கிறியள்'' என்று கேட்டார்.

''நீங்கள் தானே எல்லோரும் ஆயத்தமாக இருக்கும்படி சொன்னனீங்கள். அதுதான் நாங்கள் எப்பவும் சண்டைக்கு தயாராக

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



இருக்கிறம்'' என்றான் கிண்ணி. எப்படி இது சாத்தியமானது? பொறுப்பாளர் சோதிக்க வரப்போகிறார். என்று தெரிந்தவுடன் கால் கஸ்ரோவிற்குள் இருந்து பொருட்கள் எடுபட்டு ''ஷெல் கேசிற்குள்'' போய்விட்டன.

இன்னொரு முறை காட்டிற்குள் ஜேம்ஸ் சிறு வெல்லத்துண்டு ஒன்றைக் கிண்ணிக்குக் கொடுத்துவிட்டுத் தான் பெரியகட்டியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

''எங்காலை இது'' என்று கிண்ணி கேட்டான். ''உஸ்... அதெல்லாம் சொல்லேலாது'' இப்படி நாலைந்து தடவைகள் நடந்துவிட்டன. சிலவேளை கிண்ணிக்கு சிறு துண்டு கொடுப்பார். சிலவேளை வெறுமனே காட்டி வயிற்றெரிச்சலைக் கிளப்பிவிட்டு தான் சாப்பிடுவார். காட்டுக்குள் அந்த நேரம் இப்படியான பொருட்கள் தட்டுப்பாடாக இருந்தன. இதன் மர்மத்தை எப்படியாவது உடைக்க வேண்டுமென்று கிண்ணி சந்தர்ப்பத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஒரு நாள் மாலை நேரம் சுற்று முற்றும் பார்த்த ஜேம்ஸ் மெதுவாகக் காட்டுக்குள் நழுவினார். இதனை எதிர்பார்த்த கிண்ணி பின்னால் மறைந்து சென்றான். சுற்று முற்றும் பார்த்து விட்டு ஜேம்ஸ் மரத்தினுள் இருந்த பொந்தொன்றில் கை விட்டார். வெல்லப் போத்தல் ஒன்று அகப்பட்டது. அதனைத் திறந்து இரண்டு வெல்லக் கட்டிகளை வாயில் போட்டுக் கொண்டு மெல்லிய புன்னகையுடன் திரும்பினார். மறுநாள் மாலையும் இவ்வாறு ஜேம்ஸ் மரத்திற்குப் போய் பொந்தில் கை விட்டார். பொந்தில் இருந்த பூச்சிகள் ஜேம்சுடைய கையில் ஏறிவிட்டன.

''ஐயோ...'' என்று அலறியவாறு கையை எடுத்து உதறினார். ஜேம்சுக்கு பூச்சிகள் என்றால் பயம். மேலேயிருந்து சிரிப்புச் சத்தம் கேட்டது. அண்ணாந்து பார்த்தால் மர உச்சியில் கிண்ணி வெல்லத்தைச் சுவைத்தவாறு வெல்லப் போத்தலையும் கையில் வைத்திருந்தான். பின்பு சமாதானமாகி அரைவாசியாக எடுப்பதாக ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

இப்படித்தான் குறும்புகளும் பகிடிகளும் நிறைந்தவன். பத்துப்பேர் இருக்கின்ற இடத்தில் கிண்ணி ஒருவன் இருந்தாலே போதும். அந்த இடம் கலகலப்பாக இருக்கும். தனது கவர்ச்சியான

கதையினால் எல்லோரையும் தன்வசப்படுத்தும ஆற்றல் அவனுக்கு இருந்தது. அதோடு ஒவ்வொருத்தருக்கும் பட் பட்டென்று கதை சொல்லக் கூடிய மூளையும் அவனிடமிருந்தது, கிண்ணி நன்றாகப் படம் வரையக்கூடியவன், அத்தோடு அவனது எழுத்தும் முத்து முத்தாக அழகாக இருக்கும். எந்தவொரு விடயத்தையும் மேலோட்ட மாகக் கேட்கின்ற அல்லது பார்க்கின்ற பேர்வழி இல்லை. எதனையும் ஆழமாகப் பார்க்கின்றவன்; அறிந்திருப்பவன். தனது துப்பாக்கியை அவன் அளவுக்கதிகமாக நேசித்தான். “ இது தான் எங்கள் உயிரைக் காப்பாற்றுகிறது ” என்று அடிக்கடி கூறுவான். அவனுடைய துப்பாக்கி எப்போதுமே மிகவும் சுத்தமாக இருக்கும். ஒரு முறை படைத்துறைச் செயலகத்தில் இருக்கும் போது கிண்ணி தனது துப்பாக்கியை நிதானமாக ஆறுதலாக ஒவ்வொரு பகுதியாகக் கழற்றித் துப்பரவு செய்துகொண்டிருந்தான். இதனை அவதானித்த இன்னொரு போராளி...

“ நீயொரு கோபக்காரன், மொக்கன் எண்டெல்லோ நினைச்சன். என்னெண்டடாப்பா இவ்வளவு பொறுமையாக இருந்து துப்பாக்கியை சுத்தம் செய்கிறாய் ” என்று வியப்புடன் கேட்டான்.

இது தலைவர் எனக்குத் தந்த துப்பாக்கி தெரியுமோ! இதுதான் எங்கடை உயிரைக் காப்பாற்றுகிறது என்றான் நிதானமாக.



## 6

**09.** 08. 1990 அன்று நானும் கிண்ணியும் சொனியுடைய வீட்டிற்குப் போயிருந்தோம். அதற்குச் சில தினங்களிற்கு முன்புதான் ஜேம்சும் கிண்ணியும் தீவுக்குப் போனபோது ரூப்பர் வாகனத்தை நல்ல வேகமா ஓடி இரண்டு பல்டியடித்து முன் கண்ணாடியினைத் தொலைத்துவிட்டு வந்திருந்தார்கள். இருவருக்குமே ஊமைக் காயங்களும் உடல் முழுக்க நோவும். சொனியுடைய அப்பா இவை தொடர்பான வைத்தியங்கள் செய்வதால் இருவரும் அங்கே போய் எண்ணெய் போட்டு புக்கை கட்டி வந்தார்கள். திரும்பவும் இருவரும் போக வேண்டியிருந்தது. ஆனால் ஜேம்ஸ் வலிகாமத் தளபதியாகப் பொறுப்பெடுத்ததால் அவர் வரமுடியாது போகவே கிண்ணியுடன் துணைக்கு நான் கூடச் சென்றேன். வழமைபோல் அங்கு போனவுடன் கிண்ணியை வாங்கு ஒன்றில் படுக்க வைத்துவிட்டு இருவர் பிடிக்க கிண்ணி அலற அலற வைத்தியம் நடந்தது. “ என்ன தம்பி பெரிய கட்டை போடவோ, சின்னக் கட்டை போடவோ ” என்று சொனியின் அப்பா கேட்டார். “ ஐயோ பெரிய கட்டையே போடுங்கோ ” என்று கிண்ணி நோவால் அவதிப்பட்டபடியே கூறினான். இங்கு இப்படித்தான் நடக்கும்; இது வர்ம முறையிலான சிகிச்சை. சிகிச்சை செய்யப் போகிறவருக்கும் அதனைப் பார்ப்பவருக்கும் மனத்தைரியம் தேவை. எனக்கு இந்தக் கட்டை சமாச்சாரங்கள் ஒன்றும் விளங்கவில்லை. ஒருவாறு சிகிச்சையினை முடித்துக்கொண்டு கடாபி மாஸ்ரரின் வீடுநோக்கிப் போய்க்கொண்டிருந்தோம். “ ஏன் கிண்ணி பெரிய கட்டை போடச் சொன்னனீங்கள்? சின்னக் கட்டையாக போட்டிருக்கலாமே?” இது நான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"உங்களுக்கு விசயம் தெரியாது போலிருக்கு" என்று கிண்ணி சொல்லத் தொடங்கினான். முதற்தடவை ஜேம்சும் கிண்ணியும் சொனியின் அப்பாவிடம் வைத்தியத்திற்குப் போன போது முதலில் ஜேம்சினை வாங்கில் குப்புறப் படுக்கவைத்து விட்டு எண்ணெய் போடலுடன் சிகிச்சை ஆரம்பமாகியது. மிக மெல்லிய உருளைக் கட்டைகள் தொடக்கம் உலக்கையை விட மொத்தமான அளவு வரையும் பல்வேறு அளவுகளில் தேக்கு மரத்தாலும் வேறு சில மரங்களாலும் செய்யப்பட்ட உருளைக் கட்டைகள் பல காணப்பட்டன. தினமும் எண்ணெயில் குளிப்பதால் என்னவோ அவை பளபளவென மினுங்கிக் கொண்டிருந்தன. எண்ணெய் போட்டு சிகிச்சை ஆரம்பிக்கவே ஜேம்ஸ் கத்த ஆரம்பித்துவிட்டார். ஜேம்சினை இருவர் பிடித்திருக்க உருளைக் கட்டைகள் உடலெல்லாம் உருட்டியெடுக்கப்படலாயின. நோ தாங்காமல் ஜேம்ஸ் கத்த "இன்னும் நல்லா உருட்டுங்கோ அப்பத்தான் நோ போகும்" என்று சொனியின் அப்பாவிற்கு கிண்ணி உற்சாக மூட்டிக் கொண்டிருந்தான். ஆனால் மனதிற்குள் ஒரே யோசனை அடுத்தது தான்தானே என்று பார்த்தான். பெரிய கட்டைகள் நாலைந்தினை எடுத்து சொனியின் அப்பாவுக்குத் தெரியாமல் மேல் கூரையில் செருகி விட்டான். கிண்ணியின் முறை வந்தது. கட்டைகள் உருளத் தொடங்கின. வலி தாங்காமல் கிண்ணி கத்தத் தொடங்கினான். "பெரிய கட்டைகளைக் காணேல்லை. அதிருந்தால் உங்களுக்கு நோகாது தம்பி" என்றார் சொனியின் அப்பா ஏன் என்பது போல ஜேம்ஸ் அவரைப் பார்த்தார். "சின்னக் கட்டைகள் தான் கூட நோகும் கட்டைகள் பெரிதாகப் பெரிதாக நோ குறையும்" என்று சொனியின் அப்பா ஜேம்சிற்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே "அங்கே இருக்கு அங்கே இருக்கு" என இருதடவைகள் தான் ஒளித்து வைத்திருந்த இடத்தைக் காட்டி கிண்ணி கத்தினான் அதுக்குப் பிறகு கட்டை ஒளிச்சு வைக்கிற வேலைகள் செய்யிறதில்லை என்று கூறி முடித்தான்.



## 7

கடாபி மாஸ்ரர் வீட்டுக்கு நாங்கள் போனபோது அவர்கள் கவலையாக இருப்பதைக் கண்டோம். "ஜேம்ஸ் செத்துப் போயிட்டுது என்று பேப்பரில் கிடக்கு உண்மையோ தம்பி" என்று கவலையாக விசாரித்தார். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. காலையில் புறப்படும்போதுதான் ஜேம்சிடம் நாங்கள் எங்கெங்கு போகிறோம் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டிருந்தோம். கிண்ணி தான் முதலில் சுதாகரித்துக் கொண்டான். "கோட்டை அடிபாட்டில்தான்.. எங்களுக்கும் என்ன செய்யிற தெண்டே தெரியேல்லை" என்று சொல்லி கவலைப் படுவதாகக் காட்டிக் கொள்ள ஆரம்பித்தான். கிண்ணி எனக்குக் கண்காட்டியதை அடுத்து நானும் முகபாவங்களை மற்றவர்கள் பார்க்காமல் இருப்பதற்காகத் தலை-யக் குனிந்து கொண்டேன். போகும்வரை கிண்ணி கவலையாகவே தன்னைக் காட்டிக் கதைத்துக் கொண்டிருந்தான். இந்திய இராணுவ காலகட்டத்தின்போது இராணுவம் கடாபி மாஸ்ரர் குடும்பத்தைத் தேடியதைத் தொடர்ந்து இவர்களுக்கு வடமராட்சியில் பத்திரமான இடமெடுத்துக் கொடுத்தவர் ஜேம்ஸ். ஆகவே இவர்கள் ஜேம்சில் அளவில்லாத பாசம் வைத்திருந்தார்கள். றோட்டிற்குப் போய் மோட்டார் சைக்கிளை ஸ்ராட் பண்ணி விட்டு "நாங்கள் சும்மா பகிடிக்குச் சொன்னனாங்கள்" என்று கிண்ணி கூற "உண்மையாகவோ தம்பி" என்று கடாபி மாஸ்ரர் சந்தோஷமாகவும் நம்ப முடியாமலும் கேட்க "அது வேற பொடியன் தான் செத்தது. ஜேம்ஸ் அண்ணை இப்ப வலிகாம தளபதியாகப் பொறுப் பெடுத்திருக்கிறார்" என்று கிண்ணி கூறி அடியும் வாங்கிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டோம்.

கோட்டையில் வீரச்சாவெய்திய ஜேம்ஸ் என்ற போராளி மேஜர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஜேம்ஸ் வடமராட்சி தளபதியாக இருந்த போது இயக்கத்தில் சேர்ந்தவன். பயிற்சிக்காக காட்டிற்குள் போவதற்குப் புறப்பட்ட எல்லோரையும் அழைத்து மேஜர் ஜேம்ஸ் கதைத்த போது அவரை மாதிரியிருந்த ஒருவனை அழைத்து உனக்கு இயக்கப் பெயர் ஜேம்ஸ்... சரியோ என்று அவனுக்குப் பெயர் வைத்துவிட்டு, அநேகமாக நீ ரெயினிங் முடிச்சு வரேக்க நான் இருக்க மாட்டன். அதுக்குப்பிறகு என்ர பெயரோட நீ இரு என்று சொல்லி அனுப்புகிறார். இந்த ஜேம்ஸ் தான் கோட்டைச் சண்டையில் வீரச்சாவடைந்தான்.



அங்கிருந்து நேராக தீவிற்கு நாம் சென்றுவிட்டோம். இரவு 7 மணி போல தீவக அலுவலகத்திற்கு வோக்கி மூலம் தொடர்பு கொள்வதாக காலையிலேயே ஜேம்ஸ் கூறியிருந்தார் . நாங்கள் இருவரும் சற்று முன்பாகவே ஜேம்சின் தொடர்பிற்காகக் காத்திருந்தோம். இரவு 8 மணி வரையும் எதுவித தொடர்பும் கிடைக்கவில்லை. நாங்கள் மற்ற நிலையங்களைத் தொடர்பு கொண்ட போதிலும் அவர்களுக்கும் ஜேம்சைப் பற்றி எதுவும் தெரியவில்லை 8 மணி போல் ஜேம்சுக்கு காயம் என்று மெயினிலிருந்து செய்தி வந்தது. இருவருக்கும் ஒன்றும் விளங்கவில்லை. சற்று நேரம் கழித்து ஜேம்ஸ் சொனியின் இடத்திற்குப் போய்விட்டதாக மெயின் அறிவித்தது. இரண்டு பேருக்குமே என்ன செய்வதென்று தெரியாத நிலை. என்னால் கிண்ணியைத் தேற்ற முடியவில்லை. கிண்ணியை இயக்கத்தில் சேர்த்தது தொடக்கம் கிண்ணியின் ஒவ்வொரு வளர்ச்சிக்கும் ஜேம்ஸ் ஏதோவொரு வகையில் காரணமாக இருந்தார். கிண்ணி மோட்டார்



சைக்கிள் ஓடக்கூடிய மனநிலையில் இல்லாததினால் கிண்ணி பின்னாலிருக்க நான் ஓட நாங்கள் மெயினை நோக்கி விரைந்தோம். கிண்ணி எனது முதுகில் சாய்ந்து தலை வைத்தபடியே ஜேம்சின் ஒவ்வொரு சம்பவத்தினையும் சொல்லிக் கொண்டு வந்தான். கிண்ணி சரியாக உடைந்து போனதை என்னால் உணரக்கூடியதாக இருந்தது. இயக்கக் குடும்பத்தில் ஒவ்வொரு போராளியும் சகபோராளிகள் மீது வைத்திருக்கும் பாசப்பிணைப்புகளும் ஒவ்வொரு போராளியினது இழப்பின் போதும் அவர்கள் பரிதவிக்கின்ற உணர்வுகளும் எல்லாருக்கும் தெரியாது. எனக்கு காலையில் நடந்த சம்பவம் நினைவுக்கு வந்தது. இனிமேல் இப்படியான பகிடிகளை நான் விடமாட்டேன் என்று கிண்ணி உடைந்த குரலிலே கூறினான். அதற்குப் பிறகு இவ்வாறான பகிடிகளை கிண்ணியின் வாயிலிருந்து நான் கேட்கவில்லை.

இப்படித்தான் ஒரு நாள் குப்பிளானிலுள்ள மேஜர் டொச்சனைப் பார்த்துவிட்டுப் போகலாமெனக் கிண்ணி கூறியதால் இருவரும் டொச்சனைப் பார்க்க விரைந்தோம். ஏற்கெனவே பலாலியில் எமது காவலரண்களை உடைத்துக் கொண்டு இராணுவம் வெளியேறிய தீபாவளிச் சண்டையில் நாங்கள் மூவரும் ஒன்றாகக் குப்பிளான் பகுதியில் நின்றிருந்தோம். இங்குதான் எமது இன்னொரு நண்பனான கப்டன் ரேமனை இழந்திருந்தோம். கட்டுவன் தொடக்கம் வடக்கு றோட்வரையும் சுற்றி உள்ள காவலரண்களைக் கவனிக்கவும் கண் காணிக்கவும் கூடிய இடத்தில் தான் டொச்சன் இருந்தான். அங்கே போய் அவனைத் தட்டி எழுப்பி அங்கிருந்த எமது மருத்துவ நண்பனையும். அழைத்து எல்லோருமாக கதைத்துக் கொண்டிருந்தோம். கிண்ணி தீவகத் தளபதியாக பொறுப்பெடுப்பதற்கு முன்பு இங்கு தான் அதிக காலம் கடமையாற்றிருந்தான் எல்லோரும் அங்கு நிற்கும் போது இராணுவம் வந்தால் நல்ல சண்டை வரும் என உற்சாகமாகக் கதைத்துக் கொண்டிருந்தோம்.

அதிகாலை 5.15 மணி இருக்கும் மார்கழி மாதமாகையால் இன்னும் சரியாக விடியவில்லை. எங்கும் இருள் அப்பியிருந்தது. திட்டுத்திட்டாக வெளிச்சம் தூவியிருந்தது. ஆர். பி. ஜி. அடிப்பதும் அதனைத் தொடர்ந்து சரமாரியாக ரவைகள் அடிப்பதுமாகத் தொடங்கியது. டொச்சன் அவசரமாக வோக்கியில் காவலரணில் உள்ள போராளியுடன் தொடர்பு கொள்ள முயன்றான். முதலில் தொடர்பு கிடைக்கவில்லை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பின்பு "அண்ணை ஆமி மூவ் பண்றான் ஓடிவாங்கோ" என்று பதில் கிடைத்தது. எல்லோரும் ஆளையாள் பார்த்துக்கொண்டோம். துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு எல்லோரும் காவலரண்களை நோக்கி ஓடினோம். "அண்ணை ஆமி முன் பொயின்ருக்குள்ளே வந்திட்டான் சைட்டாலும் மூவ் பண்றான்" என்று இடையில் பதற்றத்துடன் தொடர்பு கிடைத்தது. டொச்சன் இடையில் நின்று நிதானமாக "ஆமி எதால வாறான் எண்டு வடிவாகப் பார்த்துச் சொல்லு" என்றான். "முன் பக்கத்தால் இறங்கி வாறாங்கள். கோயில் பக்கத்தாலும் பனங் கூடலாலும் வாறாங்கள்" என்றான் அந்தப் போராளி. இராணுவம் உள்ளிற்குள் இறங்கிய பக்கத்திற்கு டொச்சனும் கிண்ணியும் நானும் கோவில் பக்கத்திற்கு மருத்துவ நண்பனும் இன்னும் சில போராளிகளுமாக இடையில் பிரிந்து இறங்கினோம். மோட்டார் எறிகணைகளும் டொங்கான் எறிகணைகளும் விழுந்து விழுந்து வெடித்தன. ஒருவாறு எமது காவலரண்களுக்குப் போய்ச் சேர்ந்தோம். குப்பிளான் குரும்பசிட்டி றோட்டில் இடையில் உள்ளதுதான் எமது காவலரண்கள்.

நாங்கள் போய்ச் சேர்ந்த காவலரண்களிலிருந்து முன் பக்கம் பார்த்தால் 600–700 மீற்றர் வரைக்கும் வெட்டையையடுத்து இராணுவக் காவலரண்கள் கிடந்தன. வெட்டையில் மனித நடமாட்டம் இல்லாததினால் இடுப்புயரப் புல்லுகளும் ஆங்காங்கே சிறு சிறு பற்றைகளுமாகப் பரவிக் கிடந்தன. வலது பக்கமாகக் கண்ணைத் திருப்பினால் வலது பக்கக் காவலரண்களின் கடைசியிலிருந்து இராணுவக் காவலரணுக்கு மிகக்கிட்டவரைக்கும் அடர்த்தியாக பனங் கூடல் ஓங்கி வளர்ந்து நெஞ்சை நிமிர்த்தி நின்றது. இடது பக்கமாக குப்பிளான – குரும்பசிட்டி றோட்டில் பகல் நேரக் காவலரண்கள் முன்பாகவும் இதனைக் கண்காணிக்கக் கூடிய வகையில் இரவு நேரக் காவலரண்களைச் சற்றுப் பின்பாவும் அமைத்திருந்தோம். பகல்நேரக் காவலரண்கள் நெருக்கமாக அமைந்த வீடுகளையும், மரங்களையும் கொண்டிருந்ததாலும் குரும்பசிட்டி மினிமுகாம் காவலரணிலிருந்து 35 மீற்றர் தூரத்திலி ருந்ததாலும் என்றோ ஒரு நாள் அவன் இதற்குள் வருவான் என்று எதிர்பாத்திருந்தோம். அதே போல் பகல் நேரக் காவலரண்களிற்குள் வந்த இராணுவத்தினர் இரவு நேரக் காவலரண்களை நோக்கியும் ஏனைய காவலரண்களை வெட்டைப் பகுதியிலுள்ள சிறு பற்றைகளையும் மரங்களையும் சாதகமாகக் கொண்டு இன்னொரு அணியினரும் பனங்கூடல் பக்கமாக 3 ஆவது அணியினருமாக 3 இராணுவ அணியினர் முன்னேற முயற்சித்தனர். இவர்களுக்குத் துணையாக முகாமிலிருந்து சரமாரியாக எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.



தூரத்தில் வாகனமொன்றின் உறுமல் கேட்டது. நிச்சயமாக அது பவல் கவசவாகனமாகத்தான் இருக்கவேண்டும் என ஊகித்துக் கொண்டோம். நாங்கள் 15 பேரிற்குள்தான் இருப்போம். எங்களிடம் எல். எம். ஜி. யோ, ஆர். பி. ஜி. யோ இருக்கவில்லை. நிலைமை மோசமாக இருப்பதை கிண்ணிதான் முதலில் உணர்ந்து கொண்டான் டொச்சனிடம் "நீ உடனே ஸ்டான் பை குறூப்பைக் கூப்பிடு வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் நிலமை என்ன மாதிரி இருக்கு என்று அறி..." சற்று நிறுத்தியவன், "ஆகவும் பிரச்சனை என்றால் கோவில் பக்கத்தால் ஸ்டான்பை குறூப்புடன் இறங்க வேண்டும்" என்றான். கிண்ணியின் அனுபவமும் போர்த் திறமையும் எல்லாரிற்கும் நன்கு தெரியும். எனவே டொச்சன் துரிதமாக இராணுவத் தாக்குதலை முறியடிக்க ஒழுங்கு செய்யலானான். எல்லாப் போராளிகளையும் பிரித்து எல்லாக் காவலரண்களிலும் விட்டான். "தேவையில்லாமல் ஒருத்தரும் ரவுண்ஸ் அடிக்கக்கூடாது. நல்லாகிட்ட வரவிட்டு ஒவ்வொரு ஆளாக விழுத்த வேணும்" என்று எல்லாப் போராளிகளிற்கும் உத்தரவிட்டான். ஸ்டான்பை குழு எந்த இடத்திற்கு வரவேண்டுமெனக் கூறினான். இடது புறமும் வலதுபுறமும் தொடர்புகளை எடுத்து நிலைமைகளை அறிவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். கிண்ணியோ தனது எம்.16 ஆல் குறிபார்த்து இரையைத் தேடிப் பாய்வதற்குத் தயாரான புலிபோல் காத்துக்கிடந்தான். எனக்குப் பக்கத்திலிருந்த போராளியொருவன் "அண்ணை அங்க பாருங்கோ அந்த வேலியோரமாக ஆமிவாறான்" என இடது புறமாகச் சுட்டிக் காட்டினான். இரவு நேரமாகையால் டொச்சனுடன் கதைத்துவிட்டு வரத்தான் கிண்ணியுடன் புறப்பட்டனான். துப்பாக்கியை நான் கொண்டுவரவில்லை. என்னிடம் கைக்குண்டுதானும் இல்லை. இறுகக் கட்டிய சாரத்துடன் தான் வந்திருந்தனான். கிண்ணியைப் பார்த்தேன். எனக்குச் சற்றுத் தள்ளி இராணுவத்தினரைக் குறிபார்த்துச் சுட்டுக் கொண்டிருந்தான். டொச்சன் வோக்கியில் கதைத்துக் கொண்டிருந்தான் "மச்சான் தா ஒருக்கா இதை" என்று கேட்டு அவனது ஆயுதத்தை வாங்கிக் குறி பார்த்தேன். எனக்குச் சற்றுத் தள்ளி இடதுபுறம் ஜீ–3 துப்பாக்கி ஒன்று முழங்கியது. அதைத் தொடர்ந்து "அண்ணை ஒரு ஆமி சரி" என்று உற்சாகமான குரலொன்று கேட்டது. "மச்சான் விடாதே. பார்த்துப் பார்த்துப் போடு" டொச்சன் அந்தப் போராளியை உற்சாகப்படுத்தினான். நானும் டொச்சனது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

துப்பாக்கியுடன் வலது புறமும் இடது புறமும் நீள வெட்டியிருக்கும் அசையும் பங்கரிற் கூடாக இராணுவ நடமாட்டங்களைப் பார்த்தேன். எனக்கு ஏனோ ஆமியைத் தெரியவில்லை. நன்கு வளர்ந்த புல்லும்; பற்றைகளும் தான் எனக்குத் தெரிந்தன. ''அண்ணை அடுத்த ஆமியும் சரி அண்ணை மூண்டாவது ஆமியும் சரி'' அந்த ஜீ–3 வைத்திருந்த போராளி உற்சாகமாக இராணுவத்தினரை வீழ்த்திக்கொண்டிருந்தான். இந்த உற்சாகம் எல்லோரையும் பற்றிக் கொண்டது.

எனக்கு வலது பக்கத்தில் அமைந்த காவலரண் நில மட்டத்தினோடு இருந்தது. அதனை மூடி சிலிப்பர் கட்டைகளும் மண் மூடைகளும் அடுக்கப்பட்டிருந்தன. அதனுள்ளிருந்து பார்த்தால் இராணுவ நடமாட்டம் தெரியாததால் சிலிப்பர் கட்டைகளிற்கு மேல் போராளி ஒருவன் படுத்திருந்து எதிரிகளை அவதானித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு மறைப்பாக கிடுகு வேலியிருந்ததால் அவனை இராணுவத்திற்குத் தெரியவில்லை ஆனால் எட்டிப் பார்க்கும்போது இராணுவ இலக்கிற்கு அவன் நல்ல குறியாக இருப்பான். மெல்ல எட்டிப் பார்த்தவன் ''அண்ணை ஆமி கிட்ட வந்திட்டான்'' என்று கத்தினான். ''எங்கே ஆமி'' என்று கேட்டபடியே நான் சிலிப்பர் கட்டைகளிற்கு மேலேறி தலையை நிமிர்த்திப் பார்த்தேன். தென்னைகளும் பனைகளும் வழக்கமாகத் தெரிகின்ற பற்றைகளும் புல்லும் தான் எனக்குத் தெரிந்தன. ''படிச்..படிச்..படிச்..'' என்று தலையைச் சீவுகிறமாதிரி ரவைகள் சீறி வந்தன. டம் டம் போல கிடக்கு என்று நினைத்தபடியே இருவரும் தலையைக் குனிந்து சிலிப்பர் கட்டைகளின் மேல் படுத்துக்கொண்டோம். எங்களுக்குப் பின்னாலிருந்த கிணற்றில் துலா கட்டுவதற்காகக் கட்டப்பட்ட சீமெந்துக் கட்டு ஒன்று வந்த ரவைகள் பலவற்றைத் தாங்கிக் கொண்டது. மேலும் இருமுறை நான் எட்டிப்பார்த்தேன். ரவைகள் பல வந்ததே தவிர இராணுவத்தை நான் காணவில்லை. ''அவன் கண்டிட்டான் போல கிடக்கு கீழே இறங்குங்கோ'' என்று கிண்ணி கூற, நானும் இறங்கிக் கொண்டேன். ''அண்ணை ஆமி வாறான்'' என்று சற்று நேரத்தின் பின் மீண்டும் அந்தப் போராளி கத்தினான்.

இந்த முறை கிண்ணி பாய்ந்தேறினான். அந்தக் காவலரணுக்கு முன்பாக சுமார் 50 மீற்றர் தூரத்தில் கிணறு ஒன்றிருந்தது. அதனைச் சுற்றி இரு பெரிய பூவரசு மரங்களும் நாலைந்து தென்னை மரங்களும் சில பற்றைகளும் இருந்தன. அதற்குள் தான் எதிரிப் படையினர் வந்திருந்தனர். அதில் வந்த இராணுவத்தினரில் ஒருவன் தனது ஆர். பிஜி. இனால் எமது காவலரணைக் குறிபார்த்தான். கிண்ணியின் கழுகுப் பார்வை அவனைக் கண்டு விட்டது. கிண்ணி முந்திக் கொண்டான். ''ஒரு ஆமி சரி'' இந்த முறை கிண்ணி உற்சாகமாகக் கத்தினான். சில வாரங்களிற்கு முன்புதான் பலாலிப் பகுதியில் எம் சினைப்பர் வைத்திருந்த போராளி காயமடைந் திருந்தான். இதனால் அவனது எம் சினைப்பர் துப்பாக்கியினைத் தனக்குத் தருமாறு யாழ் மாவட்டத் தளபதியாக இருந்த பானு அண்ணையிடம் கிண்ணி கேட்டான். ஒரு நாளைக்கு ஒரு இராணுவத்தினை வீழ்த்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் எம் சினைப்பர் துப்பாக்கி இவனுக்குக் கிடைத்தது. இதனால் முதல் இரண்டு நாளும் அலைந்து திரிந்து இரு இராணுவத்தினரைக் கொன்று இருவரைக் காயப்படுத்தியிருந்தான். சாதாரண துப்பாக்கியாலேயே 200 மீற்றர் தூரத்திற்கு இலக்கு வைத்து அடிக்கக்கூடியவனாக இருந்தான். மூன்றாவது நாள் கிண்ணி தீவகத் தளபதியாகப் பொறுப் பெடுத்துக் கொண்டான்.

சில நிமிடங்கள் கீழ் இறங்கிய பின், மீண்டும் அந்தப் போராளி காட்ட இரண்டாவது மூன்றாவது என இராணுவத்தினர் வீழ்ந்தனர். சண்டை இப்பொழுது உக்கிரமான நிலையினை அடைந்திருந்தது. எங்களது உதவிக்குழு வந்து விட்டது. ஆனால் எறிகணை வீச்சால் அவர்களில் பாதியளவு பேர்தான் எங்களிற்கு உதவி செய்யக்கூடிய நிலையில் இருந்தனர். என்றாலும் அக்குழுவில் ஆர்பிஜி. இருந்ததால் எல்லோருக்கும் உற்சாகம் பிறந்துவிட்டது. குப்பிளான் குரும்பசிட்டி றோட்டால் பவல் கவசவாகனமொன்று உறுமிக்கொண்டு இராணுவத் தினரின் உதவிக்காக விரைந்து எங்கள் காவலரண்களிற்குள் புகமுற்பட்டது. எமது உதவிக் குழுவினர் துரிதமாகச் செயற்படலாயினர். முதல் ஆர். பி. ஜி. எறிகணையுடன் பவல் தள்ளாடியது. அடுத்த அடியுடன் பவல் கவசவாகனம் தனது உறுமல் சத்த மெல்லாவற்றையும் தொலைத்துவிட்டு அப்பாவித்தனமாக முழித்துக் கொண்டு நின்றது; அதன் முன்பக்கம் உருத்தெரியாமல் சிதைந்திருந்தது.

''அண்ணை பீற்றருக்குக் காயம்'' என்று ஒரு போராளி கத்தினான். இடது புறம் ஜீ–3 இனால் இராணுவத்தினரை உற்சாகமாகச் சுட்டு வீழ்த்திக் கொண்டிருந்தவன் தான் பீற்றர் சிகிச்சைக்காக பின்னுக்குக் கொண்டு செல்லப்பட்டான். போர் அனுபவம் வாய்ந்த கிண்ணி பீற்றர் திறமான ஒரு சண்டைக்காரனாக வராவிட்டால் பார் என டொச்சனுக்கும் எனக்கும் கூறினான். இவனது வாக்குப் பொய்க்கவில்லை. இந்தப் பீற்றர் வேறு யாருமில்லை யாழ். மாவட்ட வேவுப் பிரிவுப் பொறுப்பாளராக இருந்து – புகழ்பெற்ற'' கொப்பேகடுவ'' கண்ணிவெடித் தாக்குதலை நடாத்திய மேஜர் கார்வண்ணன் தான் பின்னர் கட்டைக்காட்டு மோதலில் வீரச்சாவடைந்தவன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## 8

திடீரென தாக்குதல் உக்கிரமடைந்தது. எதிரி தரப்பிலிருந்து ரவைகளும் எறிகணைகளும் அடை மழை மாதிரிப் பொழிந்தன. எங்கள் ஒருவராலும் தலைதூக்க முடியவில்லை. நானும் கிண்ணியும் துலா கட்டியிருந்த சீமெந்துத் தூண்களுககிடையில் ஒடுங்கிக் கொண்டோம். அங்கும் கிண்ணி பாதுகாப்பான மூலையில் என்னை இருத்திவிட்டு வெளியில் பார்க்கக்கூடிய இடத்தில் தான் அமர்ந்து எதிரியின் நடமாட்டங்களை அவதானிக்கலானான். எதிரி தனது முழு வளத்தையும் பயன்படுத்தி தாக்குதல் வேகத்தை அதிகரித்தான். இப்படி ஒரு ரவை, எறிகணை மழையினை புல்லாவெளிச் சண்டையின்போது மட்டுமே கண்டிருக்கிறேன். ஒருவர் கதைப்பது மற்றவருக்கு குறிப்பாக அருகிலுள்ளவருக்கே கேட்காது. ஆமிக்கு நல்ல இழப்பு போல கிடக்கு என்று அருகிலிருந்த கிண்ணி பலமாகக் கத்திய பின்பு தான் எனக்குக் கேட்டது.

நிமிர்ந்து பார்த்தேன். எங்கள் காவலரண்களிற்கு அருகாமையிலும் அரணாகவும் நின்ற தென்னை மரங்கள் வேப்பமரங்கள் வாழை மரங்கள் பூவரசு மரங்களிலெல்லாம் எதிரியின் ரவைகள் தைத்த வண்ணம் இருந்தன. நிமிர்ந்து நின்ற தென்னை ஓலைகளும் வாழை இலைகளும் ரவைகள் பட்டவுடன் பட் பட்டெனச் சாய்ந்தன. எறிகணைகளை ஈரச்செம்மண் உறுதியுடன் தாங்கிக் கொண்டது. அரைமணித்தியாலத்தின் பின்பு வாகனங்கள் வருவதும் போவதுமாக இருந்தன. அடைமழை குறைந்து இப்போது தூறல் போட்டது. வித்றோ பண்றாங்கள் போல கிடக்கு என்றான் கிண்ணி. சற்று நேரத்தின்பின் சத்தம் எல்லாம் அடங்கி விட்டது. இராணுவம் வந்த சுவடு தெரியாமல் நல்ல இழப்புடன்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

திரும்பிப் போய்விட்டது. எல்லா மரங்களையும் ஒரு முறை திரும்பிப் பார்த்தேன். எல்லா மரங்களிலும் ரவைகளும் எறிகணைகளும் பட்டு சிலவற்றில் பாலும் சிலவற்றில் பிசினுமாக வடிந்துகொண்டிருந்தன. எனக்கு அவை காயமடைந்து இரத்தம் சிந்துவதுபோல்தான் தெரிந்தது. தாயக விடுதலையை வேண்டி நின்ற இந்த மண்ணின் மைந்தர்களுடன் இந்த மண்ணும் மரங்களும் தியாக வேள்வியில் தம்மை அர்ப்பணித்திருந்ததை என்னால் உணரமுடிந்தது...

## 9

தீவகத்திற்குத் தளபதியாக கிண்ணி பொறுப்பெடுத்த வேளை நான் அளவெட்டியில் முகாமொன்றில் இருந்தேன். ஆனால் அடிக்கடி கிண்ணியைப் போய்ப் பார்த்துவிட்டு வருவேன். பொறுப் பெடுத்ததிலிருந்து ஏதாவது தாக்குதல் செய்ய வேண்டும் என்று கிண்ணி துடித்துக் கொண்டிருந்தான். கிண்ணி வேவு பார்க்க அனுப்பிய இரு போராளிகளை ஒரு நாள் இராணுவம் சுட்டுக்கொன்றது. எப்படியும் இதற்குப் பதிலடி கொடுக்க வேண்டுமென்று கிண்ணி ஆவேசமாக அலைந்து திரிந்தான். நான் ஒருமுறை போனபோது,

"ஊர்காவற்துறை வரைபடத்தை ஒழுங்கை ஒழுங்கையாகக் கீறித்தாருங்கள்" என்று கேட்டான்.

" உங்களுக்கில்லாததோ நாளைக்குக் கொண்டுவாறன்" எனப் பதிலளித்தேன். மறுநாளே தாக்குதற் திட்டம் தயாராகிவிட்டது. பானு அண்ணை தனது குழுவினரை அனுப்பியிருந்ததோடு தானும் நேரே வந்திருந்தார்.

“கிண்ணி நானும் வாறன்” என்று கூறினேன்.

“ஜேம்ஸ் அண்ணையும் வீரமரணமடைஞ்சிட்டார் நானும் நீங்களும்தான் மிஞ்சியிருக்கிறம். நான் இறங்குகிறன் நீங்கள் வெளியில் நின்றுகொள்ளுங்கோ” என்றான்.

“இப்படித்தான் முதலும் சொன்னீர்கள்” என்று சொல்லி ஒருமாதிரி கிண்ணியிடமும் பானு அண்ணையிடமும் அனுமதி பெற்றுச் சென்றேன். இராணுவத்தின் ரோந்துப் பிரிவொன்று முகாமை விட்டு முன்னுக்கு 1 கிலோ மீற்றர் வரையும் வந்து கிளியர் பண்ணுவார்கள். இது தினமும் அதிகாலையில் நடப்பதால் இராணுவம் வரும் பாதைக்கு இரவே நாம் சென்று கிளைமோர்களை ஒழுங்குபடுத்தி வைத்து இராணுவத்தை வரவேற்கத் தயாரானோம். ஒழுங்கையொன்று கடையொன்றிற்கு எதிராக இரண்டாகப் பிரிந்தது. அக்கடையினுள் கிண்ணியும் நானும் ஏனைய 6 போராளிகளும் இருந்தோம். கடைக்கு முன் பக்கத்தைத் தவிர வேறு வாசல்கள் எதுவுமில்லை. ஒழுங்கை கடைக்கு நேர் செங்குத்தாக வந்து 3 அடி தூரத்தில் இரண்டாகப் பிரிந்து செல்கிறது. விடியப் போகின்றது. சகல தடயங்களையும் அழித்துவிட்டு எட்டுப் பேரும் கடைக்குள் இருந்தோம். பிரிந்து செல்லும் ஒழுங்கையின் இரு மருங்கிலும் வேறு குழுக்களும் எதிரியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. நாங்கள் இருந்த கடைக்குள் பெரும் இடநெருக்கடி, பழைய தட்டுமுட்டுச் சாமான்களை ஒருவாறு ஒரு ஓரமாக ஒதுக்கிவிட்டு நெருங்கி இருந்தோம். மேலே நிமிர்ந்து பார்த்தால், பெரிய குளவிக் கூடு ஒன்று எப்போது விழும் நிலையில் என்று பயமுறுத்திக் கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கான பெரிய குளவிகள் கொட்டுவேன் என்று பயமுறுத்திக் கொண்டிருந்தன.

“அண்ணை இதுகள் விஷக் குளவிகள் நான்கு ஐந்து ஒன்றாகக் குத்தின தென்றால் ஆளை முடித்துப் போடும்” என்று ஒரு போராளி படு சீரியசாகக் கூறி எம்மைப் பயப்படுத்தினான். எல்லோரும் குளவிகளைப் பார்ப்பதும் விடியுதா எனப் பார்ப்பதுமாக இருந்தோம்.

“இப்படித்தான் நெடுங்கேணித் தாக்குதலையும் திட்டமிட்டு அடிச்சனான். இதுகும் சரிவரும்” என்றான் கிண்ணி. எல்லோரும் ஆமியையும் குளவியையும் மாறிமாறிப் பார்த்து பதட்டத்துடன்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இருந்ததைக் கண்ட கிண்ணி நெடுங்கேணித் தாக்குதலைப் பற்றி விபரிக்கலானான். “ஒரு கட்டத்தில் எமது போராளிகளில் ஒருவனை நோக்கி எல்.எம்.ஜி காரன் சுட்டுக் கொண்டிருந்தான் அவனை உயிருடன் விட்டால் எல்லோரையும் முடித்து விடுவான் என்று விளங்கிவிட்டது. இதனால் நான் பாய்ந்தேன்” என்று நிறுத்தினான் கிண்ணி. எல்லோரும் கதை கேட்கும் ஆவலில்;

“பிறகு என்ன நடந்தது சொல்லுங்கோ” என்றார்கள். “துப்பாக்கியைத் தோளில் கொழுவிக்கொண்டு, குண்டின் கிளிப்பைக் கழட்டியபடியே கத்திக்கொண்டு எதிரியின் நிலைக்குள் பாய்ந்தேன். அடித்துக் கொண்டிருந்த எல். எம். ஜி. யின் பரலில் இறுக்கிப் பிடித்து அதனை என் பக்கம் திரும்ப விடாமல் தடுத்தேன்.”

“கை சுட்டிருக்குமே” ஒரு போராளி இடையில் அவசரப்பட்டு புகுந்தான்.

“கை கொதிச்சுப் போச்சு. அப்படிச் செய்யாமல் விட்டால் என்னைச் சுட்டுப்போடுவான். அதனால் விடவேயில்லை. சண்டை முடிந்த பின்பு பார்த்தால் கையெல்லாம் கொப்பளம் போட்டிருந்தது” என்றான் கிண்ணி.

“பிறகு...?” ஆவலை அடக்க முடியாமல் நான் கேட்டேன்.

“எல்லோரும் சீக்கியர் – பெரியதடியன்கள். காலுக்குள் இருந்த இரு சீக்கியர்களும் எல்.எம்.ஜி. வைத்திருந்த சீக்கியனும் நினைத்திருந்தால் என்னைச் சுலபமாக அடித்து விழுத்தியிருக்கலாம். ஆனால் கிளிப்பைக் கழற்றிய குண்டைக் கண்டும், நான் பலத்த குரலில் கத்தி வெருட்டியவுடனும் பயந்துவிட்டார்கள்” என்ற கிண்ணி.

“கொஞ்சம் பொறு” என்று சொல்லிக் கதவிடுக்கால் மெல்லப் பார்த்தான்...

“வாறாங்கள்”, எல்லோரும் அடங்கினோம். எனது நெஞ்சு துடிக்கிற சத்தம் பலமாகக் கேட்கின்றது. சில விநாடிகளின் பின் நான் மெதுவாக எட்டிப் பார்த்தபோது நாங்கள் இருக்கின்ற இடத்தில் இருந்து 5 அடி தள்ளி ஒழுங்கையால் ஒரு எல்.எம்.ஜி. காரன் திரும்பிச்

சென்றுகொண்டிருந்தான். 6ஆவது இராணுவம் எம்மைக் கடந்தவுடன் கிண்ணி கிளைமோரை வெடிக்க வைத்தான். வெடித்தவுடன் கிண்ணி பாய்ந்தான். குளவியின் பயத்தால் நானும் கிண்ணியுடன் சேர்ந்து பாய்ந்தேன். நல்லவேளையாக நாங்கள் இருவரும் முதலில் பாய்ந்தது! வெடித்தவுடன் குளவிக்கூடு பிய்ந்து கொட்டுப்பட்டு எங்களுடன் இருந்த ஏனைய அறுவரையும் குளவிகள் கலைத்துக் கலைத்துக் கொட்டின என்று பிறகுதான் எனக்குத் தெரிய வந்தது. 5 நிமிடங்களில் சண்டை முடிவடைந்துவிட்டது. கிண்ணி பாய்ந்து சென்று கொல்லப்பட்ட இரு இராணுவத்தினரை இழுத்து வந்தான். அதிலிருந்த ஆயுதங்கள் எம்மால் கைப்பற்றப்பட்டன. 4 இராணுவத்தினர் அதில் கொல்லப்பட்டு 6 பேர் காயமடைந்தனர். இரு ஆயுதங்களும் தொலைத் தொடர்பு சாதனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டு இருந்தது.

## 10

படைத்துறைச் செயலகத்திற்கு ஜேம்ஸ் பொறுப்பாக இருந்த போது நாங்கள் இருவருமே இங்கு கூட நின்றோம். ஜேம்சின் வீரச்சாவுக்குப் பின்பு கூட நாம் சிறிது காலம் அங்கு கடமை யாற்றினோம். அப்போது ஒருநாள் கோட்டை இராணுவத்தை மீட்க மண்டைதீவிற்கு இராணுவம் வந்தநேரம்.

''கிண்ணியண்ண, உங்களை உடனே பானு அண்ணை கூட்டி வரட்டாம்'' என்று அவசரமாக, போராளி ஒருவன் வந்து சொன்னான்.

''ஏன்.....என்ன பிரச்சனை? ''கிண்ணி நிதானமாகக் கேட்டான்.



''மண்டைதீவிற்கு ஆமி வந்திட்டுது தெரியுமோ? வாகனங்கள் எல்லாம் கொண்டு வந்திருக்கிறான்கள்... ஆர்பிஜி. அடிக்கிற தூரத்தில் தான் நிற்கிறான்கள். அதுதான் உங்களை...'' என்று முடிக்க முன்பு ''உடனே வாறன்'' என்று கிண்ணி புறப்பட்டான்.

''கிண்ணி நானும் வாறன்.'' மீண்டும் இருவரும் இரண்டு மோட்டார் சைக்கிளில் சென்றோம். நானும் கிண்ணியை அழைக்க வந்த போராளியும் ஒரு மோட்டார் சைக்கிளில் போனபோது;

''ஆமிக்காரன் மண்டைதீவுக்கு வந்திட்டானோ'' என்று அந்தப் போராளியை வினவினேன்.

''வாகனங்கள் எல்லாம் மண்டைதீவுச் சந்தி வரையும் வந்துவிட்டது'' என்றான் அவன்.

அதற்குத் தான் கிண்ணியண்ணையை பானு அண்ணா கூப்பிட்டவர்.

''ஏன்'' என்று இடையறுத்தேன்.

''உங்களுக்குத் தெரியாதோ? யாழ்ப்பாணத்துக்குள்ளே இப்ப கிண்ணியண்ணைதான் ஆர்பிஜி. நிபுணன். மரங்கள் நிறைந்த காட்டுக்குள்ளேயே ஆர்பிஜி. அடித்துப் பெயர் வாங்கியவர் தெரியுமே?''என்றானவன். காட்டுக்குள் சண்டை தொடங்கிய ஆரம்பத்தில் அந்தப் போராளி ஜேம்ஸ் அண்ணையுடன் கால்கஸ்ரோ உதவியாளனாக இருந்தவன் என்று கிண்ணி கூறியது எனக்கு நினைவுக்கு வந்தது. காட்டில் முதல் சண்டை இந்திய இராணுவம் சும்மா அலைந்து வந்த இடத்தில் எமது முகாம் ஒன்றை நெருங்கி வந்தது. ஆமியை மறித்து அடித்துத் திசை திருப்பவென நால்வர் முகாமிலிருந்து புறப்பட்டனர். மேஜர் ஜேம்சும் கிண்ணியும் வதனனும் இன்னுமொரு போராளியும் தான் அந்த நால்வர். ஒரு வெளியைக் கடந்து ஆமி வந்து கொண்டிருக்கும் போது இவர்கள் ஆமியைக் கண்டுவிட்டனர். இவர்களோ நால்வர் அவனோ பெரிய படையாக வருகிறான். எப்படிச் சமாளிப்பது? ஜேம்சின் சாதுரியம் கைகொடுத்தது. போன எல்லோரையும் பிரித்துத் தூரத் தூர விட்டார். கிண்ணியிடம் இருந்த ஏ.கே இனை வாங்கிக் கொண்டு அவர்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ஒவ்வொரு பற்றையாக இடம்மாறிச் சுட்டு விட்டு நிறையப்பேர் இருப்பது போன்ற பிரமையினை எதிரிக்கு உருவாக்கினார். இந்த நிலையில் எதிரியின் பிறண் எல். எம். ஜி. ஒன்று மரம் ஒன்றிற்குக் கீழ் இருந்து மழையாகப் பொழிந்து கொண்டிருந்தது. இதனை நிற்பாட்டினால் தான் கொஞ்ச நேரமாவது இராணுவத்தை மறிக்கலாம் என கிண்ணி எண்ணினான். கால்கஸ்ரோவை எடுத்தான். தூரத்தைக் கணித்துவிட்டு குண்டை நிரப்பி அடித்தான் எல். எம். ஜி. இருந்த மரத்தடி புகைமண்டலமாகியது. எல்.எம்.ஜி. அடி நின்றது. பற்றை விட்டுப் பற்றையாக அடித்துக்கொண்டிருந்த ஜேம்ஸ் கால்கஸ்ரோ அடித்ததைக் கண்டு ஓடி வந்தார். "என்ன கிண்ணி அடிச்சுப் போட்டியோ...?" உண்மையில் ஜேம்ஸ் தான் கால்கஸ்ரோ இயக்குனர். அப்படியிருக்க... "அங்க பாருங்கோ" – இது கிண்ணி 3 அல்லது 4 இராணுவம் அதில் விழுந்து கிடந்தனர். மனநிறைவுடன் திரும்பிய ஜேம்ஸ்;

"அங்க பார்! அந்தப் பக்கம் கன ஆமி கூட்டமாக நிற்கிறாங்கள்; எதுக்கும் கால்கஸ்ரோ அடிக்க நான் வாறன்" மீண்டும் அவர் ஏ. கே. இனைத் தூக்கிக்கொண்டு போய்விட்டார். இதுதான் கால்கஸ்ரோவால் கிண்ணி அடித்த கன்னி அடி. ஜேம்ஸ் வீரச்சாவடைந்த பின்னர் இந்த சம்பவத்தைத் கிண்ணி அடிக்கடி என்னிடம் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. இவையெல்லாம் சில கணங்களில் வந்து போனது.

"கிண்ணியண்ணையின்ரை குமுழமுனை அடியைப் பற்றி கேள்விப்பட்டனிங்களோ? "

எனது நினைவினைக் குலைத்தவாறே அந்தப் போராளி என்னிடம் கேட்டான்.

கேள்விப்பட்டனான்தான் ஆனால் சரியாகத் தெரியாது என்றேன்.

குமுழமுனையில் உள்ள குன்று ஒன்றின் மீது எங்கட போராளிகள் ஏறிக்கொண்டிருந்த போது அதுக்கு மேலேயிருந்த வீட்டில் பதுங்கியிருந்த இந்திய இராணுவத்தினர் கிட்ட வரவிட்டுச் சுடுவம் என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். போராளிகளுக்கு இது தெரியாது. அடுத்த குன்று ஒன்றில் இருந்து இதனைப் பார்த்த



கிண்ணிக்கு உடனே ஆபத்து விளங்கிவிட்டது. ஆர்.பி.ஜி. எடுத்து மேலே இருந்த வீட்டுக்கு அடித்தார். வீட்டுக்குள் இருந்த இராணுவத்தினர் சிலர் இறக்க பலர் காயமடைந்தனர். மீண்டும் கிண்ணியின் ஆர்.பி.ஜி. முழங்கியது. இராணுவத்திற்கு மீண்டும் சேதம். எங்கட போராளிகள் களநிலைமையை உணர்ந்துவிட்டனர். அந்தத் தாக்குதலில் சில ஆயுதங்கள் எம்மால் கைப்பற்றப்பட்டன. இன்றைக்குக் கூட அந்த வீட்டுக்காரர் கிண்ணி ஆர்.பி.ஜி. அடித்த இடம் என எழுதி வைத்திருக்கிறார்கள்.

அந்தப் போராளி சொல்லிக் கொண்டிருக்கும் போதே கோட்டையினை நெருங்கிவிட்டோம். இம்முறை தொலைத் தொடர்புக் கட்டிடத்திற்குப் பின்னால் பொலிஸ் விடுதியில் போய் நிற்கின்றோம்.

அண்ணை நிமிர்ந்து நிற்காதையுங்கோ பங்கருக்குள் இறங்குங்கோ சொல்லி முடிக்க முன் பீரங்கிக்குண்டு ஒன்று மண்டைதீவிலிருந்து பொலிஸ் விடுதியைத் தாக்கியது. பார்த்துக் கொண்டிருக்கும் போது பொலிஸ் விடுதியின் மேற்பக்க கட்டிடத் துண்டுகள் பொத்துபொத்தென்று விழுந்தன.

அன்று முழுவதும் அதற்குள் தான் நின்றோம். எனக்கு எல்லாமே புது அனுபவமாக இருந்தது. இரவு போல பானு அண்ணை கிண்ணியை அழைத்தார்.

"மண்டைதீவிலிருந்து கோட்டைக்கு இராணுவம் இறங்கப் போறாங்கள். பண்ணைப் பாலத்தில் வைத்து மறிக்கிறதிற்கு ஒரு குழுவை அனுப்பப்போறன். நீ தான் அதில் ஆர். பி. ஜி. கொண்டு போக வேண்டும்" என்றார் பானு அண்ணை.

"எனக்கு நல்லவொரு உதவியாள் இருந்தால் சரி நான் எங்கேயும் வருவேன்" என்றான் கிண்ணி.

"சரி நாளைக்கு இரவு வெளிக்கிடுவதற்கு ஆயத்தப் படுத்துங்கோ" என்றார். பின் பானு அண்ணை ஏனைய ஏற்பாடுகளைச் செய்வதற்காக அங்கிருந்து நகர்ந்தார். பானு அண்ணையுடன் கதைத்துவிட்டு பொலிஸ் விடுதிக்குத் திரும்பினோம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## 11

நிலைமையினைப் பார்த்துவிட்டு இரவு சாப்பிட்டுவிட்டுக் கட்டிட அகழியொன்றிற்குள் படுத்தோம். இரவு நல்ல மழை பெய்தது. திடீரென உடலெல்லாம் குளிர்ந்தது பின்னர் நனைவது போலிருந்தது. எழும்பிப் பார்த்தால் அகழி வழியே வெள்ளம் பாய்ந்து வந்துகொண்டிருந்தது. அந்த அகழி கடற்கரைப் பக்கமாக இருந்தது. எனவே எல்லா வெள்ளமும் கடலை நோக்கி வந்ததால் அகழி மெல்ல மெல்ல நிரம்பியது (எனக்கு ஒப்பரேசன் டே பிறேக் என்ற படம் ஞாபகம் வந்தது). எல்லாச் சாமான்களையும் மேலே தூக்கிப் போடப் போட வெள்ளமும் போட்டி போட்டுக் கொண்டு வந்தது. மேலே தரையும் நனைந்து விட்டது. படுப்பதற்கென இடத்தைத் தேடினால் நனையாத தரையில்லை. எல்லோரும் மூலைக்கு மூலை ஒட்டிக் கொண்டோம். இதற்கிடையில் சென்றியும் வேறு பார்க்கவேண்டிக் கிடந்தது. விடியும் வரை எவரும் நித்திரை கொள்ளவில்லை. அந்தக் குளிரில் நடு நடுங்கி மூலைக்கு மூலை ஒடுங்கிய எமது போராளிகளைப் பார்க்க எனக்கு ஏதோ செய்தது. அன்று நாங்கள் மாத்திரமில்லை – கோட்டையினைச் சுற்றியிருந்த அநேக போராளிகள் நித்திரை கொள்ளவில்லை. இது கோட்டையில் மாத்திரம் நடக்கவில்லை. பலாலி, ஆனையிறவு கட்டைக்காடு, பரப்புக்கடந்தான், சிலாவத்துறை என இராணுவ முகாம்கள் எங்கிருக்கின்றதோ அங்கெல்லாம் எமது போராளிகள் மழையென்றும் பாராது வெயிலென்றும் பாராது. விழியுறங்கிடாது காவல்செய்து வருகின்றார்கள். விடிந்து மறுநாள் இரவாகிவிட்டது. பானு அண்ணை வரச்சொன்ன இடத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும்போது...

''என்ன மாதிரி கிண்ணி... நானும் வரட்டோ? '' – இது நான்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

''வெட்டவெளியில் காப்பரண்கள் இல்லாத இடத்திற்குப் போறம் ஒரு பக்கம் கோட்டை மற்றப்பக்கம் மண்ணடைதீவு. பகலில் தலை வைக்கேலாது. போறாக்கள் திரும்பி வாறதைப் பற்றி நினைக்க இயலாது என்று நிறுத்திய கிண்ணி இப்பத் தான் ஜேம்ஸ் அண்ணையும் செத்தவர் நீங்கள் ஏன் அதற்குள்ள அவசரப்படுறியள்...? நீங்கள் நில்லுங்கோ! நட்புவட்டத்தில் ஓராளாவது மிஞ்ச வேண்டாமே ''என முடித்தான். இந்த வசனத்தை இப்போது நினைக்கும்போது ஏதோவெல்லாம் செய்வது போல உணர்வு ஏற்படுகின்றது. இறுதியாக கிண்ணியும் தோழர்களும் சிறு தோணியில் பண்ணைப் பாலத்தை நோக்கிப் புறப்பட்டனர். போகும்போது '' கவனமாக இருங்கோ''என்று கூறிவிட்டுப் போகின்றான்.

இந்த கவனமாக என்ற சொல்லின் அர்த்தத்தை இரு வருடங்களிற்கு முன்பு தான் பாடமாகப் படித்திருந்தேன். அப்போது நானும் கிண்ணியும் சிறு கடல் ஒன்றைக் கடந்து முகாம் ஒன்றை வேவு பார்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோம். அந்த முகாமைத் தாக்கவுள்ள அணியிலுள்ள குழுத்தலைவர்களிற்கு இடத்தைக் காட்டவேண்டியிருந்தது. இருவரும் பலமுறை முயன்றும் சந்தர்ப்பங்கள் சரியாக அமையவில்லை எனக்குப் பொறுமை எல்லை கடந்து விட்டது.

''இண்டைக்கு எப்படியென்றாலும் நான் கூட்டிக்கொண்டு போய்க் காட்டுறன்'' என்றேன்.

''இண்டைக்கு... எனகெண்டால் நல்லாய்ப் படேல அக்கரையில ஒரு மாதிரி இருக்கு.''

''இல்லை ! எப்படி என்றாலும் நான் கூட்டிக் கொண்டு போறன்.''

நான் பிடிவாதமாக நின்றேன் – மற்றவர்கள் பயத்தால் போவில்லை என்று நினைப்பார்கள் என்பதற்காக. மெதுவாகக் கிண்ணியிடம் ''இண்டைக்குப் போக வேண்டும். இல்லாட்டி வேற மாதிரி நினைப்பார்கள் ''என்றேன்.

''அதுக்காக மொக்குத் தனமாகப் போறதோ? கதைக்கிற ஆக்களை யார் என்று சொல்லுங்கோ? ரெக்கி (வேவு வேலை) மண்டையைப் பாவித்துத்தான் செய்யவேண்டும்.''

"நீங்கள் நில்லுங்கோ நான் போயிட்டு வாறன்."

கிண்ணிக்குக் கோபம் வந்துவிட்டது. நான் ஒரு மாதிரிச் சமாளித்து " நீங்கள் நில்லுங்கோ நான் போயிட்டு வாறன் " என்று கூறிப் புறப்பட்டேன். நானும் தோழர்களும் கட்டுமரத்தைத் தள்ளிக்கொண்டு புறப்படும்போது "கவனமாக இருங்கோ" என்று காதருகே யாரோ கிசு கிசுத்துக் கேட்டது. திரும்பிப் பார்த்தால்.... கிண்ணி வேறு சில புத்தி மதிகளையும் கூறிவிட்டு நாங்கள் போவதையே பார்த்து நின்றான். அக்கரைக்கு 25யார் தூரமிருக்க கட்டுமரத்தை நங்கூரமிட்டு கிண்ணி கூறியபடியே எங்களுடன் வந்த ஓட்டியைக் கரை நிலைமைகளை அவதானிக்க அனுப்பினேன். போன வேகத்திலேயே ஓட்டி திரும்பி வந்தார்.

"அண்ணை கரையெல்லாம் இராணுவம்" பதட்டத்தோடு கூறினார்.

வெட்ட வெளி மொட்டைக் கடலில் நாங்கள் ஆறுபேர் கட்டு மரத்தோடு மரமாகப் படுத்துக்கொண்டு மெதுவாக சத்தம் செய்யாமல் திரும்பினோம். பாதுகாப்பான தூரத்திற்கு அப்பால் வந்த பின்பே எல்லோரும் நிம்மதியாக மூச்சை விட்டோம். கிண்ணி சொன்னதன் அர்த்தத்தை அப்பொழுதுதான் முழுவதுமாக உணர்ந்தேன். கிண்ணியை மொக்கன் என்பார்கள் சிலர். ஆனால் எச்சரிக்கை யுணர்வும், அவதானமும் சண்டையில் ஆர்வமும் பழகுவதில் நண்பனாகவும் இருப்பவன் கிண்ணி.



## 12

சிறிது நாட்களாக கிண்ணியை எனது முகாம் பக்கம் காணவில்லை. யாழ்ப்பாணத்திற்குள் நின்றால் சுற்றிச் சுற்றி எப்படியும் என்னிடம் வருவான். நிச்சயம் ஏதாவது ஒரு இராணுவ முகாமின் காவலரண்களை மோப்பமிட்டவாறு இருப்பான் என்பது எனக்குத் தெரியும் வன்னியில் இருந்து வந்த சில போராளிகள் கிண்ணி அங்கு நிற்பதாகக் கூறினார்கள். மிக விரைவில் தாக்குதல் ஒன்றைப் பத்திரிகையில் பார்க்கலாம் என்று எதிர்பார்த்தேன். அதேபோல....

தட்டுவன்கொட்டியில் 35 காவலரண்கள் அழிப்பு 15 இராணுவம் பலி என்று புலிகளின் குரல் தெரிவித்தது. சில நாட்களின் பின் கிண்ணி எனது முகாமிற்கு வந்தபோது

"நல்ல அடியொன்று அடிச்சிருக்கிறியள்" என்றேன்.

மெல்ல மறுத்து "நான் அங்கு போகேல்லை" என்றான் ஒரு சிரிப்புடன்.

பிறகு ஒருமாதிரி

நாங்கள் எதிர்பார்த்துப் போனது கூட, ஆனால் அவங்கள் ஓடிட்டாங்கள் என்றான்.

"போன வருசம் தட்டுவன்கொட்டியில் அடிபட்டனீங்கள் தானே! அந்த இடமோ இம்முறையும்" என்று கேட்டேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அதுக்குக் கிட்டத்தான் என்று பதிலளித்தான்.

சென்ற வருடமும் ஆனையிறவுச் சண்டைக்கு முன்பு தட்டுவன்கொட்டியில் அமைந்துள்ள எமது காவலரண்களைக் கைப்பற்றி பரந்தனுக்கு வர இராணுவம் முற்பட்டது. அது முக்கியத்துவம் வாய்ந்ததொரு சண்டை. அந்த இடத்தில் தடுக்காது விட்டால் இராணுவம் பரந்தன் வரையும் வரும் ஆபத்து இருந்தது. அந்தச் சண்டையில் கிண்ணி தனது முத்திரையைப் பதித்தான். அதிகாலையிலிருந்து இரவு வரை வெட்ட வெளியில் இராணுவத்துடன் சமர் புரிந்து அவர்களுக்குப் பலத்த இழப்புக்களை ஏற்படுத்தி முகாமிற்கு அடித்துக் கலைத்தவன் இவன்.

''எண்டாலும் காரைநகர் அடி மாதிரி வராது'' என்றான் கிண்ணி.

உண்மையில் அது ஒரு அற்புதமான அடி. காரைநகர்ப் பாலத்தில் தங்களுக்கு அடி விழும் என்று இராணுவம் கனவு கூடக் காணவில்லை. கிண்ணி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவின் விசேட தளபதியாகப் பொறுப்பெடுத்த சில வாரங்களிற்குள் அதனைச் செய்து காட்டினான். எந்தத் தாக்குதல் என்றாலும் வேவு நடவடிக்கையில் இறுதிவரை ஈடுபட்டு தனக்குத் திருப்தி ஏற்பட்ட பின்னரே தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவான். காரைநகரில் நடந்த சுவையான சம்பவம் ஒன்றைக் கிண்ணி கூறினான். திடீர் அதிரடித் தாக்குதல் மூலம் இராணுவத்தை உடைத் தெறிந்து விட்டு எதிரியின் காவலரண்களைக் கைப்பற்றி ஆயுதங்களை எடுத்தபின் தனது போராளிகளைத் திருப்பி அனுப்பிக் கொண்டிருந்தான். ஒரு மூலையில் சாக்கொன்று குவியலாகக் கிடந்தது போகும் அவசரத்தில் அதனைக் காலால் உதைந்து தள்ளினான். உள்ளுக்குள்ளிருந்த ஏதோ பொருளொன்று காலில் பட்டு காலை வலிக்கச் செய்தது. திறந்து பார்த்தால் அதற்குள் 60 எம். எம். மோட்டாரும் எறிகணைகளும் காணப்பட்டன.



# 13

ஒருமுறை புங்குடுதீவிலிருந்து நெடுந்தீவு செல்வதற்காகப் புறப்பட்டோம். எல்லாம் ஆயத்தம் எமது படகினைச் செலுத்தும் ஓட்டியாக இருந்த போராளி மட்டும் வரச்சுணங்கியது.

'' என்ன செய்வம்'' என்றார் ஜேம்ஸ்.

''ஏன் நான் இருக்கிறன் தானே வெளிக்கிடுவம்'' என்றான் கிண்ணி. கிண்ணி மோட்டார் சைக்கிள் வாகனமெல்லாம் லாவகமாக ஓட்டியதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் படகோட்டுவதா...!

''ஏன் போய்ச் சேர்ரதில்லையோ'' என்று பட்டென்று நான் கூறினேன்.

கிண்ணி முல்லைத்தீவிலிருந்து வண்டியோட்டி வந்தது கஸ்ரோவுக்குத் தெரியாது போல கிடக்கு என்றார் ஜேம்ஸ். ''என்ன...?'' ஆச்சரியத்துடன் கிண்ணியைப் பார்த்தேன். நல்ல வேளையாக ஓட்டி வந்து சேர்ந்ததால் நாங்கள் நெடுந்தீவை நோக்கிய பயணத்தைத் தொடர்கிறோம். ஒருபக்கம் கிண்ணி சுக்கானைப் பிடித்துக்கொண்டான். வண்டி சீராகச் சென்றது.

முல்லைத்தீவில் நடந்த சண்டையொன்றில் படுகாய மடைந்த இரு போராளிகளைச் சிகிச்சைக்காக அனுப்ப வேண்டியிருந்தது என்று ஜேம்ஸ் ஆரம்பித்தார். அந்தச் சண்டையில் கிண்ணிக்கும் முதுகில் இரண்டு காயம் ஆனால் சிறிய காயம். அந்தப்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

போராளிகளைக் காப்பாற்றுவதற்காகக் கிண்ணி படகொன்றையும் இரண்டு வெளியிணைப்பு இயந்திரங்களையும் எடுத்துக் கொண்டு ஒரு ஓட்டியையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டான். இரு இயந்திரங்களுமே சீராக வேலை செய்யவில்லை. வெற்றிலைக்கேணிக்குக் கிட்ட வந்தபோது ஒரு இயந்திரம் முழுமையாகச் செயலற்றுவிட்டது. கரைக்குக் கிட்ட விட்டுப் பார்த்தார் இந்திய இராணுவ நடமாட்டம். சற்றுத் தள்ளிப் போன போது மற்ற இயந்திரமும் பழுதடைந்து விட்டது. எப்படியோ குடத்தனைக் கரைக்கு அண்மையில் வந்து சேர்ந்தவுடன் நிலைமையினைப் பார்த்து இயந்திரம் ஒன்றை எடுத்துவர ஓட்டியினைக் கிண்ணி அனுப்பினான். நீண்ட நேரமாகியும் ஓட்டி திரும்பவில்லை. அவர் இறங்கியவுடன் ஓடிவிட்டார் என்பது பிறகுதான் கிண்ணிக்குத் தெரியும். படகிலோ உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இரு போராளிகள். கிண்ணி கரையிறங்கி அங்கிருந்த வர்களிடம் இயந்திரத்தைக் கேட்டிருக்கிறான். அப்போதுதான் இராணுவம் தனது சோதனையை முடித்து வெளியேறியிருந்தது அதனால் அங்கிருந்தவர்கள் பயத்தினால் மறுக்க எப்படியோ பழுதடைந்த இரு இயந்திரங்களையும் திருத்துமாறு அவர்களிடம் கொடுத்து விட்டு இயந்திரம் ஒன்றை வேண்டிக்கொண்டு அங்கிருந்து கிளம்பினான். புறப்பட்டதிலிருந்து சரியாகச் சாப்பாடு தண்ணீர் இல்லை. ஒருவாறு வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையினை அண்மித்தான். கரைக்கு வர முற்பட்ட போது கரையிலிருந்து வயோதிபர் ஒருவர் ஓடிவந்து வராதே! வராதே! என்று கையைக் காட்டி எச்சரித்து விட்டுத் திரும்பிச் சென்றுவிட்டார். கிண்ணிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இவ்வளவு தூரம் வந்தும் கரையில் இறங்க முடியாத நிலை. முருகைக்கற்களுக்கு அப்பால் நின்ற வள்ளத்துடன் படகை அணைத்து நங்கூரமிட்டான். அந்த வயோதிபரைக் கிண்ணிக்கு நன்கு தெரியும்.

ஏன் இப்படிச் செய்தார்?

கிண்ணிக்கு விளங்கவில்லை. சிறிது நேரத்தில் கட்டுமரத்தில் வலைகளைப் போட்டுக் கொண்டு துடுப்பாற் செலுத்திக்கொண்டு கிண்ணியினை நோக்கி வந்தார். அந்தப் பெரியவர்.

“ கரையெல்லாம் ஒரே ஆமியிடாப்பா நல்ல வேளை நான் உன்னைப் பார்த்தது ” என்றார் அவர். அப்போதுதான் கிண்ணி



கரையைப் பார்த்தான். கடலைக் கவனியாது கரையிலுள்ள வீடுகளைச் சோதனைபோட்டுக்கொண்டிருந்த இந்திய இராணுவத்தைக் கண்டான். இப்படித்தான் எத்தனையோ சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் இந்திய இராணுவ காலகட்டத்தின்போது எமது போராளிகளைக் காப்பாற்றி இருக்கின்றார்கள்.

சரியான பசிக்களையிலிருப்பாய் எண்டு நினைக்கிறன் என்று கூறியபடியே வலையினை ஒதுக்கினார். அதற்குள் நாலைந்து போராளிகளுக்கான உணவு குளிர்பானங்கள் குளுக்கோஸ் போன்றவை இருந்தன. கிண்ணிக்கும் ஏனைய போராளிகளுக்கும் அதனைக் கொடுத்து விட்டு...

நான் போறன் அவங்கள் போன உடன் வாறன்... அது வரைக்கும் இங்கேயே இரு என்று சொல்லி விட்டு அவர் கரை திரும்பி விட்டார்.

ஆமி போனவுடன் கரையில் ஒரு கூட்டமே திரண்டு விட்டது. அதன்பிறகு கிண்ணிக்கு எதுவித வேலையும் இருக்கவில்லை. வல்வை மக்களே எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டார்கள். வண்டியினைக் கரைக்குக் கொண்டு வந்தார்கள். கிண்ணியையும் மற்றவர்களையும் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பினார்கள். இயந்திரத்தை எடுக்க அம்பனுக்குச் சிலர் போனார்கள் சாப்பாடு மருத்துவ வசதிகளைக் கவனிக்கப் பத்திரமாக அனுப்பப்பட்டனர். பின்னாளில் இந்தச் சம்பவத்தைக் கிண்ணி எத்தனையோ தடவைகள் நன்றியுணர்வுடன் என்னிடம் குறிப்பிட்டிருக்கிறான். இந்திய இராணுவ காலத்தின் போது உதவி செய்த மக்களைக் கிண்ணி மறப்பதில்லை. இதே போலத்தான் மேஜர் ஜேம்சும் தீவகப் பகுதிக்குப் பொறுப்பாகப் போனவுடன். இந்திய இராணுவ காலகட்டத்தில் அங்கு நின்ற போராளிகளை அழைத்து இந்திய காலகட்டத்தின் போது இயக்கத்திற்கு உதவி செய்தவர்களைத் தனக்கு அறிமுகப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். முதன் முதலில் அவர்களுடனேயே கதைத்து அந்தத் தொடர்புகள் அறுந்துவிடாமல் பார்த்துக்கொண்டார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## 14

ஜூலை மாதம் 10 ஆம் திகதி... தோழன் ஒருவன் பதறிய படியே வந்தான். முகமெல்லாம் இருண்டு கறுத்து சோகம் அப்பிக் காணப்பட்டது. என்னிடம் வந்தவன் எதுவும் பேசாது தள்ளாடியபடியே கதிரையில் அமர்ந்து கொண்டான். ஏதாவது கேட்டால் அழுது விடுவான் போல இருந்தது.

''என்ன ஒரு மாதிரி இருக்கிறியள்'' என நிலவிய மௌனத்தை உடைத்தவாறே கேட்டேன்.

''கிண்ணியெல்லோ...'' மேலே கூறமுடியாது முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டான். உடனே எனக்கு விளங்கிவிட்டது. சில நிமிட நேரங்களிற்கு என்ன நடந்த தென்று ஜீரணிக்க முடியவில்லை.

''மச்சான் மச்சான் என்று கூப்பிட்டு நெருக்கமாகவும் அன்பாகவும் பழகிற தளபதி அவன்'' என்று சொல்லி அந்தத் தோழன் கண் கலங்கினான்.

''ஏன் டொக்டர் அன்ரியின் இடத்திற்குக் கொண்டு போனால் அவனைக் காப்பாற்றியிருக்கலாமே?'' ஏதோ ஆற்றாமையினால் கேட்டேன்.

இரண்டு நாளைக்கு முதல் தான் சிறுகாயப்பட்டு அன்ரியினிடத்துக்குப் போனவன். அடுத்த முறை உங்கட இடத்துக்கு வரமாட்டான் என்று அன்ரியிடம் சொன்னவனாம்... சொன்னது போல...!



நான் காயப்பட்டு வீழ்ந்த போது ஓடியோடி வந்து என்னைப் பார்த்தவன் – என்னைக் கவனிக்க தனது தாயையும் சகோதரனையும் அனுப்பியவன்– நான் யோசிக்கக்கூடாதென்று வீடியோ விளையாட்டுக் கருவியையும் றேடியோவையும் தந்தவன் களச் செய்திகளை உடனுக்குடன் வந்து கலகலப்பாகச் சொல்பவன் – இன்று இயக்கச்சிப் போர் முனையில்.... அவன் மௌனமாகிப்போனான்!

மேஜர் ஜேம்சினைப் பற்றி நான் ஒரு சிறு குறிப்பு ஒன்றை ஈழநாதத்தில் எழுதியிருந்தேன். இதனைப் படித்த கிண்ணி எப்படியும் என்னைத் தேடிவருவான் என்பது எனக்குத் தெரியும். எதிர்பார்த்த படியே அன்று இரவு கிண்ணி வந்தான்.

''எனக்குத் தெரியும் நீங்கள்தான் இதை எழுதியிருப்பியள்'' என்றான்.

''உங்களை நம்பித்தான் நான் முன்னுக்குப் போறன்'' என்றான்.

''ஏன்'' என்று விளங்காதவனாகக் கேட்டேன்.

''நான் செத்தால் நீங்கள்தான் என்னைப் பற்றி எழுதவேணும்'' என்றான் குழந்தைத்தனமாக. போராட்ட வாழ்வில் சாவைப்பற்றி போராளிகள் சாதாரணமாகக் கதைப்பார்கள். சொனியும் கிண்ணியும் நானும் இறுதிக் காலகட்டத்தில் நெருங்கிய நண்பர்களாக இருந்தோம். அப்போது மூவரும் இருந்து கதைக்கும்போது சொனிதான் ஓரளவு காலம் உயிருடன் இருப்பான் என நாம் நம்பினோம். இதனால் எங்கள் புகைப்படங்கள் போன்றவற்றைச் சொனியிடம் கொடுத்து வைத்திருந்தோம். முதலில் கிண்ணியும் இரண்டாவதாக நானும் மாவீரர் பட்டியலில் சேருவோம் என்று நம்பியிருந்தோம். ஆனால் நடந்ததோ வேறு சென்ற வருட சண்டையில் சொனி இந்தமுறை கிண்ணி இடை நடுவில் நான்....

உங்களுக்குத்தானே என்னைப் ''பற்றி தெரியும் என்றான் கிண்ணி. இவ்வளவு விரைவாக கிண்ணியைப் பற்றி நான் எழுதவேண்டிவரும் என்று நினைக்கவில்லை.

இப்படி நாங்கள் கதைத்த சில நாட்களின் பின்பு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

“நான் செத்தபிறகு இதை உடைத்துப் பாருங்கோ” என்று என்னிடம் கடித உறையொன்றைக் கொண்டு வந்து தந்தான். அக்கடித உறை உடைக்காதவாறு செலோ ரேப்பால் சுற்றப்பட்டிருந்தது அதற்கு மேல் பொலித்தீனால் சீல் பண்ணப்பட்டிருந்தது. தரும் போது அதைப் பற்றி பெரிதாக நான் எதுவும் நினைக்கவில்லை. பின்னர் கிண்ணி வீரமரணமடைந்த பின் அதனை உடைத்த போது அதில் ஒரு வரலாறு இருந்தது – இந்திய இராணுவம் இந்த மண்ணைவிட்டு அவசரமாக ஓடியதன் பின்னணிகளுள் ஒன்று இருந்தது – விடுதலைப் புலிகளின் ஓர்மமும் துணிச்சலும் திட்டமிடும் தந்திரோபாயமும் வெளிப்பட்டது. நெடுங்கேணிப் பாடசாலையில் இந்திய இராணுவத்திற்குக் கொடுத்த அடியைப்பற்றி கிண்ணி அதில் எழுதியிருந்தான் அவன் ஒரு சிறந்த சண்டைக்காரன் மாத்திரமல்ல சிறந்த பேனாக்காரன் என்பதையும் நிரூபித்திருந்தான்.

கிண்ணியின் தமையன் முரளி வன்னியிலிருந்து வரும் போதெல்லாம் பல போராளிகளை அழைத்து தனது வீட்டிற்கு அறிமுகப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

நான் வராவிட்டாலும் எங்கட பெடியள் வீட்டுக்கு வருவாங்கள் அவர்களையும் உன்ர பிள்ளைகளாய்ப் பார் என்று முரளி தனது தாயாருக்கு அடிக்கடி கூறியிருந்தான். முரளி எப்படிக் கூறியிருந்தானோ அப்படியே கிண்ணியும் தப்பாது கூறியிருந்தான். அந்தத் தாயும் போராளிகளில் தனது பிள்ளை மாற்றான் பிள்ளை என்று வேறுபாடு பார்ப்பதில்லை இந்திய இராணுவ காலகட்டத்தின்போது ஏராளமான போராளிகளிற்கு அடைக்கலம் கொடுத்துக் காப்பாற்றிய வீடு அது. உணவும் ஆதரவும் வழங்கிப் பராமரித்த வாசல் அது. இன்று அந்தத் தாயின் பிள்ளைகளில் கிண்ணியும் முரளியும் திரும்பிவராத இடத்திற்குப் போய்விட்டார்கள்.

மற்றப் பிள்ளைகள் வருமென்று அந்தத் தாய் காத்திருக்கிறாள்...



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

**இணைப்பு – 1**

# நெடுங்கேணி இந்திய இராணுவ மினி முகாம் : புலிகள் தாக்கி நிர்மூலமாக்கிய வரலாறு.

நெடுங்கேணிப் பாடசாலையில் அமைந்திருந்த இந்திய இராணுவத்தின் மினி முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதல் குறித்து இத் தாக்குதலுக்குத் தலைமை தாங்கிச் சென்ற மேஜர் கிண்ணி தனது அனுபவத்தை விபரித்துள்ளார். மேஜர் கிண்ணி இத் தாக்குதலில் வேவு பார்த்ததிலிருந்து தாக்குதல் வரை நேரடியாகப் பங்கு பற்றியவராவார்.

அன்று தண்ணீரூற்று ஆலடிச்சந்தியில் எனது குழுவினரும் நானும் வைத்த கண்ணிவெடியினை இந்திய இராணுவத்தினர் ஓர் தேசவிரோதியின் உதவியினால் கைப்பற்றிவிட்டனர்.

அக் கண்ணிவெடியினை மீளக் கைப்பற்றும் முயற்சியாக நானும் எனது குழுவினர் மூவருமாக மொத்தம் நால்வர் தனித்து நின்று 75 இற்கும் மேற்பட்ட இந்தியச் சிப்பாய்களுக்கு எதிராகப் போரிட்டோம். பெரிய ஏவுகணைகள், மோட்டார்கள், ஜிபிஎம். ஜி. கள், எல்.எம்.ஜி. கள் சகிதம் எம்மை எதிர்த்த இந்திய சிப்பாய்களுக்கு எதிராக... நாங்களோ! எனது கையில் ஜி–3 துப்பாக்கியும் எனது தோழர்கள் இருவரிடம் ஏ. கே. உம் ஒருவரிடம் எஸ். எல். ஆர். உம் மாத்திரமே வைத்துப் போராடினோம். இறுதியில் மேலும் இந்திய இராணுவத்தினர் அப்பகுதியை நோக்கி நாலா திசைளிலும் குவிக்கப்பட்டனர். இதனால் இரண்டு மணி நேரத் தாக்குதலின்பின் எமது தாக்குதலை இடைநிறுத்திவிட்டு அவ்விடத்தில் இருந்து பின்வாங்கினோம்.

தாக்குதலில் இருந்து பினவாங்கிய நாங்கள் குளக்கரையிலே அடர்ந்த காட்டின் மத்தியில் அமைந்திருந்த எமது பிரதான முகாமிற்குச் சென்றோம். அங்கு நாங்கள் எதிர்பார்த்ததைவிட அமோகமான வரவேற்புக் காத்திருந்தது. நாங்கள் சக்கைவெடி மருந்தை விட்டுவிட்டு வந்ததற்கு எமது சக குழுவினரும் அப்போதைய முல்லை மாவட்டத் தளபதியான லெப். கேணல் நவமும் என்னையும் எனது குழுவினரையும் சகலவிதமான முறைகளிலும் நக்கல் (நையாண்டி) செய்தும் கேலிப்பேச்சுப் பேசியும் வரவேற்றனர். காட்டில் (எமது வீட்டில்) நாங்கள் வாரந்தோறும் நடத்தும் கலை நிகழ்ச்சியிலும் எம்மைக் கேலி செய்து எமக்கு இடையில் இருந்த ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் தோழமையையும் சகோதர பாசத்தினையும் எவராலும் பிரிக்க முடியாதவாறு வலுப்படுத்திக் கொண்டார்கள்.

எங்களின் இவ் ஆயுத ஒப்படைப்பால் (இச்சம்பவத்தினை எல்லோரும் ஆயுத ஒப்படைப்பு என்றே கேலியாகப் பேசுவார்கள்) எனது குழுவினர் 15 நாட்களுக்கு எந்தவிதமான தாக்குதலுக்கும் போகக்கூடாது என்று எமது தளபதியால் பணிக்கப்பட்டனர். அப் பதினைந்து நாட்களிலும் நாங்கள் முகாம் விஸ்தரிப்பு வேலைகளில் ஈடுபட்டோம். வெளியில் சண்டை நடந்து கொண்டிருக்கும் போது சண்டைக்குச் செல்ல விடாது மறித்து வைப்பதுதான் ஓர் வீரனிற்கு மிகப்பெரும் தண்டனை என்ற உண்மையை அந்தப் பதினைந்து நாட்களில் எமது குழுவினரும் நானும் உணர்ந்து கொண்டோம்.



இப்பதினைந்து நாட்களின் பின் எங்களுக்கு தாக்குதல் நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

எனது குழுவினர் தாக்குதல் நடத்துவதற்கான இடங்களை வேவு பார்ப்பதற்கு என தோழர்களைப் பல இடங்களுக்கும் இருவர் இருவராகப் பிரித்து அனுப்பிவிட்டு மிகுதிப்பேரை எமது தனி முகாமிற்கும் அனுப்பிவிட்டு, நானும் இன்னுமொரு போராளியும் நெடுங்கேணிப் பகுதியில் இராணுவ நடமாட்டத்தை வேவு பார்க்கச் சென்றோம்.

அங்கு எட்டு நாட்கள் தங்கி இருந்து வேவு பார்த்து பின்வரும் மூன்று நிலைகளில் ஏதாவது ஒன்றில் இராணுவத்தினரைத் தாக்குவது என்று முடிவு எடுத்தோம்.

1) நெடுங்கேணி பிரதான முகாமிற்கு 300 மீற்றர் தொலைவில் உள்ள பாடாசாலையில் அமைந்துள்ள மினிமுகாமைத் தாக்குவது.

2) ஏழு மடுவிற்கு ரோந்து செல்லும் இராணுவத் தொடர் அணியை இடையறுத்துத் தாக்குவது.

3) நெடுங்கேணி பிரதான முகாம் – ஒட்டிசுட்டான் றோட்டில் உள்ள பிரதான காவல் அரண்கள் இரண்டைத் தாக்குவது.

என்ற முடிவோடு எனது குழுவினரைச் சந்தித்தோம். அவர்களுடன் கதைத்து ஆராய்ந்ததில் எல்லோரும் நெடுங்கேணி பாடசாலையில் அமைந்துள்ள மினி இராணுவ முகாமைத் தாக்குவது தான் எமக்குப் பலவிதத்திலும் நன்மை தரும் என்று முடிவெடுத்தோம்.

இத்தாக்குதலுக்கான வேவு நடவடிக்கையின் 8 நாட்களையும் முட்பற்றைகளிலும் கட்டிடத்தின் மேற் கூரைகளிலும் நீரும் சேறும்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

நிறைந்த வாய்க்காலிலும் சாப்பாடு தண்ணீர் இன்றிப் பட்டினியாக இரவு பகல் நித்திரையும் இன்றிக் கழித்தோம். எந்நேரமும் இந்தியச் சிப்பாய்களின் வட இந்தியப் பாசையும் காலிலே அணிந்துள்ள இராணுவப் பாதணிகளின் ஓசையும் அந்த 8 நாட்களுக்குள் எம்முடன் நன்றாகப் பழகிவிட்டன. கிடைக்கின்ற ஒரு சில சமயங்களை எமது ஆதரவாளர் ஆன ஒரு மூதாட்டியின் சிறு குடிசையில் கழிப்பதுண்டு. அந்த 8 நாட்களும் அம் மூதாட்டி அளித்த அமிர்தத்தையே சாப்பாடாகக் கொண்டு எமது வேவு நடவடிக்கையைத் துரிதப்படுத்தினோம். எம்மால் அடக்க முடியாதவாறு பசி வாட்டினால் அம் மூதாட்டியின் சிறு குடிலின் படலை இரவு நேரகாலம் தெரியாமல் தட்டப்படும். அம் மூதாட்டியும் எமக்காக எந்த நேரமும் எமக்குப் பிடித்த பழஞ்சோற்றையும் சம்பலையும் தயாரித்து வைத்திருப்பார். உண்ட களைப்பில் சிறிது உறங்கிவிடுவோம். பின் அம் மூதாட்டி நாம் கூறியபடி சில நிமிடங்களில் எமக்கு சர்க்கரையுடன் தேயிலைச் சாயத்தைக் கோப்பையில் கொண்டுவந்து எழுப்பிவிடுவார். பின்னர் மீண்டும் அடுத்தடுத்த இரவிலேயே அக்குடிலின் படலை இரகசியமாகத் தட்டப்படும். அதுவரை பச்சைத்தண்ணீரும் கிழவி தரும் கொஞ்ச மரவள்ளிப் பொரியலுந்தான். எமது உடல் பலவீனமடைந்து எனக்குக் காய்ச்சல் வாட்டத் தொடங்கியது. முகாமில் எனக்கு மருத்துவம் செய்துவிட்டு எமது குழுவினர் சண்டைக்குத் தயாராகிக் கொண்டு இருந்தனர்.

நானும் சக போராளிகள் இருவருமாக எமது பிரதான முகாமிற்குச் சென்று எமது தளபதி லெப். கேணல் நவத்திடம் எமது வேவு பற்றியும் ·செய்யப்போகும் தாக்குதல் பற்றியும் விரிவாக எடுத்துச் சொன்னோம். அதற்கு நவம் மறுத்துவிட்டார். ஏனெனில் இத்தாக்குதல் தற்கொலைப் படைத் தாக்குதலிற்குச் சமனானது என்றும் இதில் விடப்படும் சிறு பிழையும் அத்தாக்குதலில் பங்கு பற்றும் 15 பேரையும் எதையும் சாதிக்க விடாமலே கொன்றுவிடும் என்றும் எடுத்துரைத்தார். ஆனால் நானோ எனது குழுவினரோ விடாது அடம் பிடித்தோம். தண்ணீரூற்றில் நாம் பறிகொடுத்த சக்கைக் கானிற்குப் பதிலடி கொடுப்போம் என்ற எமது குழுவினரின் பிடிவாதத்தால் நவம் இதற்குச் சம்மதித்தார். ஆனால் கடுமையான நிபந்தனையுடன். அவர் தானும் சண்டைக்கு வருவதுதான் என்றார். ஆனால் நாங்கள் எவரும் அனுமதிக்க மாட்டோம் என்று கூறி அவரை மறிப்பதற்குள் என்னுடன் வந்த சகபோராளிகள் இருவர் அழுதே விட்டார்கள். நவமும் நாங்கள்



கூறியதற்குச் சம்மதித்து தாக்குதல் நடத்தும் குழுவிற்கு உதவி தேவைப்படின் உதவி வழங்குவதற்காக 35 போராளிகளுடன் தான் தயாரானார் நாங்களும் சம்மதித்தோம். ஏனெனில் இவர்கள் தங்கி இருக்கும் இடம் நாங்கள் தாக்கும் மினி முகாமிற்கு அரைமைல் தொலைவில் என்பதால்.

எமது குழுவில் இருந்து தாக்குதலிற்குச் செல்லும் குழுவினரைத் தெரிவு செய்வது பெரும் கஷ்டமான காரியம் என்பது அப்போதுதான் எனக்கும் நவத்திற்கும் தெரிய வந்தது. அனைத்துப் போராளிகளுமே நாங்களும் வருகின்றோம்... நாங்களும் வருகின்றோம் என்று என்னுடன் சண்டைபிடித்தனர். ஆனால் நவமோ சிலரைத் தெரிவுசெய்துவிட்டு துண்டுகளில் பெயரை எழுதி குலுக்கல் மூலம் 15 பேரைத் தெரிவு செய்தார். பின்னர் குலுக்கல் முறையிலேயே மீதம் 35 பேரையும் தெரிவு செய்தார். பின்னர் தாக்குதல் குழுவிற்குத் தலைமைதாங்க என்னை நியமித்து தாக்குதல்பற்றிப் போராளிகளுக்கு விளக்கமளிக்கும்படி கூறினார்.

நெடுங்கேணி பிரதான இந்திய இராணுவ முகாமிற்கு மிக அண்மையில் 300 மீ. தூரத்தில் அமைந்துள்ள பாடசாலையிலேயே இம் மினி முகாம் அமைக்கப்பட்டுள்ளது. பாடசாலை நடைபெறும் வேளைகளில் இவர்கள் தங்களிற்கு என்று சில கட்டிடங்களை ஒதுக்கிவிட்டு மீதியிலேயே பாடசாலை நடாத்த அனுமதித்தனர். பாடசாலையின் சுற்றுப்புறங்கள் அனைத்திலும் இவர்களின் பாரிய காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மினி முகாமிற்கு ஒரு புறம் குளமும் (வெளி) மறுபுறம் சந்தையும் மற்றோர் பக்கம் முல்லைத்தீவு வவுனியா பிரதான பாதையும் மற்றைய பக்கம் சிறு வெளியும் முகாமிற்கு முன்பாக சிலோன் தியேட்டர் செல்லும் பிரதான பாதை பிரிந்து செல்வதுமான நாங்கள் தாக்குவதற்கு மிகவும் கடினமான பிரதேசத்திலேயே இம் மினி முகாம் அமைந்திருந்தது. இதில் 25 முதல் 28 இராணுவ வீரர்கள் உள்ளார்கள். இவர்கள் அனைவரும் சீக்கிய இராணுவ வீரர்ளே. இவர்கள் இரவு 7 மணியளவில் நெடுங்கேணி பிரதான இராணுவ முகாமிற்குச் சென்றுவிட்டு மறுநாள் அதிகாலை 5 மணியளவில் மீண்டும் மினி முகாமிற்கு வந்துவிடுவார்கள். இடையிலே உள்ள 10 மணித்தியால இடை வெளிக்குள் நாங்கள் பாடசாலை வகுப்பறை செயலகம், ஆசிரியைகள் ஓய்வு அறை என்பவற்றில் 5 பேர் 5 பேராகப் பிரிந்து மறைந்து இருக்கப் போவதாகவும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இராணுவத்தினர் முகாமிற்குள் வந்த பின்னர் வெளியில் நிற்கின்ற நவம் ஒரு போராளியை அனுப்பி மினி முகாமை நோக்கித் துப்பாக்கியால் சுட்டு விட்டுத் திரும்பும்படி கட்டளை இடுவார். அதுவரைக்கும் இராணுவத்திற்கு எந்தவித சந்தேகமும் வரவிடாமல் நாங்கள் உள்ளே பதுங்கி இருப்போம் என்றும் வெளியில் இருந்து துப்பாக்கிச் சூடு கேட்ட பின்னர் நாங்கள் உள்ளே இருந்து தாக்குதலை ஆரம்பிப்போம் என்றும் கூறினேன். அனைவரும் அதற்குச் சம்மதித்தனர்.

நான் எனது குழுவினர் பதினைந்து பேரையும் 5 பேர் 5 பேராக மூன்று குழுக்களாகப் பிரித்து அவை ஒவ்வொன்றிற்கும் குழுத் தலைவரை நியமித்து விட்டு இராணுவ மினி முகாமிற்கு வேவு பார்க்கச் சென்றுவிட்டேன்.

மறுநாள் மாலை (10 ஆம் நாள்) சகல குழுக்களுடனும் நவம் நெடுங்கேணி பெரிய குளம் பகுதியில் என்னைச் சந்தித்து இன்று வெள்ளிக்கிழமை நாளை சனிக்கிழமை பாடசாலை நடைபெறாது ஆகவே இன்று இரவு மினி முகாமிற்குள் தங்கிவிட்டு நாளை காலை தாக்குதலை மேற்கொள்ளும்படி எனக்குக் கட்டளை இட்டு விட்டு தனக்குரியதும் தனது குழுவிற்குரியதுமான இடங்களைப் பார்வையிட வந்தார். நான் மற்றைய குழுக்களை ஓர் இடத்தில் தங்கவைத்து விட்டு நவத்துடன் சென்றுவிட்டேன்.

அன்று இரவு இராணுவத்தினர் சற்றுத் தாமதமாகவே – 11.30 மணியளவிலேயே மினி முகாமில் இருந்து பிரதான இராணுவ முகாமிற்குச் சென்றனர். இதனால் எமது செயற்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை. 12 மணியளவில் நாங்கள் பாடசாலையில் அமைந்துள்ள மினி இராணுவ முகாமிற்குள் எமது காற்தடங்கள் பதியாத முறையில் ஒவ்வொருத்தராக உட்சென்றோம்.

5 மணித்தியாலங்களே மீதமாக உள்ளதால் எமது வேலைகளைத் துரிதமாகச் செய்துமுடித்தோம். எப்படியோ அதிகாலை 4.20 மணியளவில் எமது அனைத்துப் போராளிகளும் மறைவாகத் தங்கக்கூடிய இடங்களைத் தெரிவுசெய்தோம். 4.30 மணிக்கு எல்லோரும் அவரவர்களுக்குரிய இடங்களில் மறைவாக நிறுத்தப்பட்டனர்.



அதிகாலை 5.15 மணியளவில் இந்திய சீக்கிய சிப்பாய்கள் அவர்களது பாடசாலை மினிமுகாமிற்குள் பிரவேசித்தனர். வந்தவர்களில் ஒரு பிரிவினர் பாடசாலைக் கட்டிடங்களை ஒருமுறை நோட்டமிட்டு விட்டுச் சென்று தமக்குரிய காவலரண்களில் நிலை எடுத்தனர். இவர்களை மறைவிடங்களில் இருந்த நாங்கள் பார்த்த போது உருமறைந்து ஒளிந்துகொண்ட முறை சரியா என எங்களை எமது போராளி ஒருவர் பார்வையிட வருகின்றார் என்று எங்கள் மனதிற்குள் நினைத்து மனதிற்குள்ளேயே சிரித்துக் கொண்டு ஒளித்துக் கொண்டோம்.

சுற்றி நின்ற இந்தியச் சிப்பாய்களை நினைக்கும் போது எங்களிற்கு – உள்ளே உள்ள விடுதலைப் புலிகளிற்கு – வெளியில் இருந்து எந்தவிதமான இடையூறும் வரவிடாமல் காவல் மிகக் கடுமையாக உள்ளதாக நினைத்து எங்களிற்குள்ளேயே சிரித்துக் கொண்டோம். எங்களிற்கும் இராணுவத்தினருக்கும் சில அடி தூரமே இருந்ததால் எம்மால் வெளிப்படையாகச் சிரிக்க முடியவில்லை.

நாங்கள் 5 பேர் இருந்தது அதிபர் அறை. அதன் ஒருபக்க யன்னலோரமாக ஓர் இராணுவ வீரன் காவலில் நிற்கின்றான். அவனது பின்பக்கத் தலை எமக்குச் சில அடி தூரத்திலேயே தெரிந்தது. இவன் எமது அறையின் உடைந்த யன்னலின் மேல் சாய்ந்து இருந்ததால் இவனது தலைப்பாகையின் ஒரு பகுதிக் குஞ்சம் எமது அறைக்கு உள்ளே தொங்கியது. இவன் சற்றும் எதிர்பாராததால் உள்ளே நாங்கள் இருப்பதை அவதானிக்க முடியவில்லை. என்றாலும் என்னுடன் இருந்த எல்விற்றனிடம் இவன் திரும்பினால் சுடும்படியும் எந்த நேரமும் துப்பாக்கி இவனைக் குறி பார்க்கட்டும் என்றும் சைகை மூலம் கட்டளை இட்டேன். உதவிக்குச் சுடும்படி கணேசிற்கும் சைகை மூலம் கட்டளை இட்டேன்.

நான் அவ்வறைக் கதவின் வாசலை உட்புறமாகப் பூட்டி அதன் மேல் சாய்ந்து இருந்தேன். கதவின் மறுபுறம் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் கதிரைகளைப் போட்டு துப்பாக்கிகளை எமது கதவின் ஓரத்தில் சாத்திவிட்டுப் பீடி குடித்தபடி சம்பாசித்துக் கொண்டிருந்தனர். அவர்களது பீடியின் புகை கதவு இடுக்குகளிற்குள்ளால் அறைக்குள்ளே வந்து எங்களுக்குப் பெரும் சிரமத்தைக் கொடுத்தது. பீடிப் புகையினால் இருமி விடுவோமோ என்ற பயம். இவர்கள் இருவரும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இடை இடையே உரத்த குரலில் ஹிந்தி சினிமாப் பாடல்ளைப் பாடியபடி இருந்தனர். இடை இடையே றோட்டில் சென்ற பெண்களைக் கூப்பிட்டு பலவிதமான கேள்விகளும் ஹிந்தியில் கேட்டார்கள். இரண்டு மூன்று பெண்கள் அழுவது மிகவும் நன்றாக எமக்குக் கேட்டது. அது ஏன் என்று எமக்கு இன்றுவரை விளங்கவில்லை.

எமக்கு அடுத்த அறையில் (50 மீற்றர் தூரத்தில்) தங்கேஸ் தங்கி இருந்தார். அவர் தங்கி இருந்தது ஆசிரியைகள் ஓய்வெடுக்கும் அறை. அதன் யன்னல்கள் யாவும் மரத்தால் ஆனவை. அதனால் அவர்களுக்கு வெளியில் நடப்பவற்றைப் பார்க்க முடியவில்லை. இவர்கள் 5 பேரின் அறைவாசலில் மினிமுகாம் அதிகாரியும், தொலைத்தொடர்பு சாதன அதிகாரியும் ஓர் புளிய மரத்தின் கீழ் மேசைகளின் மேல் இருந்து பெரிதாக எதைப்பற்றியோ அலட்டிக் கொண்டிருந்தனர். இவர்களது மறுபுறம் யன்னலிற்குப் பக்கத்திலேயே பாரிய காவல் அரண் ஒன்று இருந்தது. இதுவும் றோட்டில் செல்லும் இளம் பெண்களைத் தமக்கு அருகே கூப்பிட்டு நிற்க விட்டு தங்களுக்குள் சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தனர். இவர்களது அறை சற்றுப் பெரிதாக இருந்ததால் இவர்கள் ஆளுக்கு ஒரு மூலையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர்.



அடுத்த அறையில் (சற்றுப் பின்பக்கமாக முகாமின் மத்தியில் உள்ள ஓர் அறை) காந்தனும் 4 பேரும் தங்கி இருந்தனர். இவ் அறைக்குள் உள்ள 5 பேரும் முக்கிய பங்கு உள்ளவர்கள். ஏனெனில் இவர்கள் முகாமின் மத்தியில் உள்ளதால் இவர்களுக்கு இரண்டு எல். எம். ஜி. பொருந்திய பாரிய காவலரண்களைக் கண்காணிக்கும் பொறுப்பு உள்ளது. இவர்களது அறையின் முன்னால் உள்ள தேமா



மரத்தடியில் 5, 6 இந்தியச் சிப்பாய்கள் உரையாடியபடி இருந்தார்கள். இந்த அறையின் யன்னலைத் திறந்தால் முக்கியமான எல். எம். ஜி. பொருத்திய காவல் அரணின் முதுகுப்புறம் மிகக்கிட்டவாக 30 மீ. இல் தெரியும் இந்த யன்னலிற்குள் இருந்து சுட்டால் எல். எம். ஜி. காவல் அரணை இலகுவாகச் செயலிழக்கச் செய்துவிடலாம். இவர்களின் அறையின் மற்றைய யன்னலினூடு பார்த்தால் தங்கேஸ் தங்கி உள்ள அறையும் அதன் அருகில் உள்ள சில காவல் அரண்களும் தெளிவாகத் தெரியும். ஆகவே இவர்கள் சமயத்தில் தங்கேசிற்கும் உதவி வழங்கலாம். ஆகவே இவ் அறையில் உள்ளவர்களுக்கே முக்கிய பங்காக இருந்தது.

எனக்கும் நவத்திற்கும் வோக்கித் தொடர்பு நிறுத்தப்பட்டு 45 நிமிடங்கள் கழிந்துவிட்டன. வெளியில் இருந்து எந்தவிதமான துப்பாக்கிச் சூடுகளும் கேட்காததனால் எமது மனதில் பல்வேறு யோசனைகள் புகுந்துவிட்டன. எல்விற்றன், ஜெகன், கணேஸ், சுதன் ஆகியோரே என்னுடன் அறையில் இருந்தவர்கள். இவர்கள் யாவரும் இராணுவம் முகாமிற்குள் வந்து ஒன்றரை மணிநேரமாகின்றது. இப்படியே இருந்தால் தற்செயலாக இராணுவத்தினர் எம்மவர்களை முகாமிற்குள் கண்டுவிட்டால் முடிவு வேறு விதமாக மாறி விடும் என்று சைகைமூலம் விபரித்தனர். எனக்கும் உண்மை விளங்கி இருந்தாலும் இன்னும் ஒரு மணித்தியாலம் பொறுமையாக இருந்து பார்ப்போம். அதன் பின்னரும் வெளியில் இருந்து சூடு வராவிட்டால் நாமே உள் இருந்து தாக்குதலை ஆரம்பிப்போம் என்றும் அவர்களைச் சமாதானம் செய்து தடுத்தேன். பின் மினி முகாமிற்கும் நவத்திற்கும் இடையில் ஏதோ பிரச்சினை அதனால்தான் நவத்தினுடைய குழுவினர் மினி முகாமிற்கு வெளியிலிருந்து துப்பாக்கியினால் சுடவில்லை என எங்களிற்குள் முடிவெடுத்தோம்.

தங்கேசினுடைய குழுவினரும் இதே மனநிலையிலேயே தனித்தனியே இருந்து யோசனை செய்தனர். எங்கள் மூன்று குழுவினருக்கும் எந்தவிதமான தொடர்புகளும் அற்ற நிலையில் மற்றைய இரு குழுவினரும் எனது ஆரம்பச் சூட்டிற்காக எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

நானோ அல்லது தங்கேசோ அல்லது காந்தனோ முதலில் சூட்டினை ஆரம்பித்தால் ஏதாவது ஒரு அறைக்குள் இருக்கும் குழுவினர் அறைக்கு வெளியே வரமுடியாமல் இராணுவத்தினர் எம்மை மடக்கி விடுவார்கள். வெளியில் இருந்து துப்பாக்கிச் சூடு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வந்தால் இராணுவத்தினரின் கவனமெல்லாம் வெளிப்புறத்திலேயே இருக்கும் நாம் அனைவரும் யாருக்கும் தெரியாமல் அறையை விட்டு வெளியேறி வெளிப்புறமாக நிலை எடுத்திருக்கும் இராணுவத்தினரின் முதுகுப்புறம் நின்று சுலபமாகச் சுட்டுவிடலாம் என்பதே எமது தாக்குதல் திட்டமாகும். ஆனால் உள்ளே இருந்து நாமே சூட்டினை ஆரம்பித்தால் எமக்கு அருகிலுள்ள இராணுவத்தினர் உட்புறமாக நிலை எடுத்து எமது அறைகளின் வாசல்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கி விடுவார்கள். அப்படிச் செய்தால் அறையில் இருந்து வெளியே பாய ஒவ்வொருவராகச் சுட்டு வீழ்த்தி விடுவார்கள். ஆரம்பச் சூடு சுடுபவர்கள் குழு மாத்திரமே அறையை விட்டு எந்த இழப்புகளும் இன்றி வெளிவந்து தாக்கலாம். அவர்களையும் கூட சில நிமிடங்களில் இராணுவத்தினர் தமது நிலைகளில் இருந்து சுட்டு வீழ்த்திவிடும் நிலை. ஆகவே கூடுமான வரையில் இழப்புகளைக் குறைப்பதற்காக நாங்கள் 7.30 மணிவரைக்கும் பொறுத்திருப்போம் என்றும் அதற்கிடையில் இராணுவத்தினர் எம்மைக் கண்டால் மாத்திரமே தாக்குதலை ஆரம்பிப்பது என்றும் எனது குழுவிற்கு சைகைமூலம் விபரித்தான்.

உள்ளே இருக்கும்போது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு நாளாகக் கழிந்துகொண்டிருந்தது. அடிக்கடி எனது மனதில் நவம் கூறிய வார்த்தை நினைவில் வந்து வந்து உறுத்தியது. இதில் விடும் சிறு பிழையும் தாக்குதலில் பங்கு பற்றும் 15 பேரையும் எதையும் சாதிக்காமலே கொன்றுவிடும் என்று நவம் சொன்னது உண்மைதானா என்று மனம் அடித்துக் கொண்டது. எங்கோ சிறு பிழை நடந்துவிட்டது என்பது மாத்திரம் தெளிவானது.

இதே இடை நேரத்தில் எங்கள் 15 பேரினது மனதிலும் எங்களுடன் தோளோடு தோள் நின்று போராடி மரணித்துக் கொண்ட சகபோராளிகளினது நினைவுகளே மேலோங்கி நின்றன. இந்த இக்கட்டான நேரத்திலும் ஒவ்வோர் அறையிலும் ஒவ்வொருவரும் மற்றவரைச் சைகைமூலம் கேலி செய்து மனத்திலும் முகத்திலும் சந்தோசம் நிரம்பியே காணப்பட்டனர்.

வெளியில் நவத்தினுடைய நிலைப்பாடோ வேறுமாதிரி இருந்தது. 5.00 மணியளவில் ஓர்வீரனை இராணுவத்தினரின் வருகையை அறிவிக்கும்படி கூறி மினி முகாமிற்கு அருகில் அனுப்பி வைத்திருக்கின்றார். 5.00 மணிக்கு வந்த அப்போராளி இராணுவத்தினர் வராததால் சற்றுப் பின்னிற்கு உள்ள பற்றையில் பதுங்கி இருந்து



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பார்த்திருக்கின்றார். அவ்வீரனோ பகலில் நடந்த களைப்பினாலும் தொடாச்சியான நித்திரையின்மையாலும் சற்று உறங்கிவிட்டர். அவரிற்கு 5.15 இற்கு இராணுவத்தினர் வந்தது தெரிய வாய்ப்பின்றிப் போய்விட்டது. இதனால் இராணுவத்தினர் பாடசாலைக்கு வந்து சேர்ந்த விபரம் நவத்திற்குத் தெரிய வாய்ப்பின்றிப் போய்விட்டது. இராணுவத்தினர் இன்னமும் பாடசாலைக்குள் வரவில்லை என்ற நினைப்பிலேயே நவம் மற்றைய போராளிகளுடன் உடனடியாக எமக்கு உதவி தேவைப்படின் வழங்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டுள்ளான். ஆனால் நவத்தினுடைய மனமோ உள்ளே உள்ள எங்கள் பதினைந்து பேரைப் பற்றியும் எமது காப்புப் பற்றியுமே சிந்தித்த வண்ணம் இருந்தது. உள்ளே உள்ள எங்களிற்கு எந்தெந்த விதத்தில் உதவிகளை விரைவாக வழங்க முடியுமோ அந்த முறைகளை எல்லாம் சக போராளிற்கு விளங்கப் படுத்திய வண்ணம் இருந்தார். பின்னர் 7.00 மணியளவில் வேறு இரு போராளிகளை முகாமில் இராணுவத்தினர் வந்துவிட்டனரா என்பதை அறிய அனுப்பி வைத்தார்.

7 மணி 10 நிமிடம் அளவில் வெளியில் இருந்து பாடசாலை மினி முகாம் கட்டிடங்களை நோக்கி தொடர்ச்சியான 30 துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டன. எங்கள் அனைவரினது முகங்களிலும் தானாகவே சந்தோசம் நிரம்பியது. நாங்கள் எதிர்பார்த்த அந்தச் சந்தர்ப்பத்தை ஒழுங்காகப் பயன்படுத்தினோம்.

நாங்கள் ஐவர் இருந்த அறைவாசலில் சாய்ந்துகொண்டிருந்த இரண்டு இந்தியச் சிப்பாய்களும் உடனடியாக நிலத்தில் விழும் சத்தமும் அதனைத் தொடர்ந்து எல். ரி. ரி. ஈ. என கத்துவதும் எமக்குத் தெளிவாகக் கேட்டது. உடைந்த யன்னலுடன் சாய்ந்துகொண்டு இருந்த இந்தியச் சிப்பாய் ஓடிச்சென்று பிரதான பாதையுடன் அமைந்திருந்த காவல் அரணில் இருந்து துப்பாக்கியால் வெளிப்புறத்தை நோக்கி 4 5 வேட்டுக்களைச் சுட்டபடி இருந்தான்.

நாங்கள் ஐவரும் இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன் படுத்துவதற்காக எமது அறைக் கதவினைத் திறந்துகொண்டு திடீர் என்று நானும் எல்விற்ரனும் வெளியில் பாய்ந்தோம்.

அப்போது எமது அறை வாசலில் விழுந்து படுத்துக் கிடந்த இரண்டு இந்தியச் சிப்பாய்களின் துப்பாக்கிகள் எமது அறைக்கதவின் ஓரமாகச் சாத்தி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டோம்.

எமது கையில் சுடுவதற்குத் தயாராக இருந்த ரைபிள்களையும் எம்மையும் கண்ட அவ்விரு சிப்பாய்களும் அதிர்ச்சியாலும் ஏக்கத்தினாலும் அப்படியே உறைந்துபோய் வாயை "ஆ" வெனத் திறந்தபடி கண்வெட்டாமல் எம்மைப் பார்த்தனர். சுதனும் ஜெகனும் அவர்களைச் சுட்டு வீழ்த்தினர். நாங்கள் அவர்களின் துப்பாக்கிளை எடுத்துக் கொண்டு அவர்களது காவலரண்களை நோக்கி (பின் புறமாக) ஓடினோம். ஓர் இடத்தில் எமது அறையின் உடைந்த யன்னலில் சாய்ந்து இருந்த இந்தியச் சிப்பாய் தனது துப்பாக்கியின் பெரும் பகுதியை வேலி முட்கம்பிகளுக்கு இடையில் சிக்கலான பகுதியில் நீட்டி வெளிப்புறமாக இருந்த குடியிருப்புக்களை நோக்கிச் சுட்டுக் கொண்டிருந்தான். அவனின் அருகில் சத்தமின்றிச் சென்ற நான் அவனை நோக்கி எனது துப்பாக்கியின் நுனியைக் குறிபார்த்தபடி அவனது இராணுவப் பாதணியில் எனது காலால் உதைத்து "இங்கு என்ன செய்து கொண்டிருக்கின்றாய்" என்று கேட்டேன். அதுவரை என்னை அவதானிக்காத சிப்பாய் துப்பாக்கிகளின் வேட்டுச் சத்தத்திலும் மறுபுறங்களில் இறந்து கொண்டிருந்த இந்தியச் சிப்பாய்களின் மரண ஓலங்களிலும் நான் அழைத்தது கேளாதது போல திரும்பிப் பார்த்தான். எனது நிலையைச் கண்ட அந்தச் சிப்பாய் வாயடைத்துப்போய் என்னைச் சுடுவதற்காகத் தனது துப்பாக்கியை முட்கம்பிகளுக்கு இடையிலிருந்து இழுத்து எடுக்க முயற்சித்தான். ஆனால் துப்பாக்கி நாடா முட்கம்பியில் சிக்கியதால் துப்பாக்கியை எடுக்க முடியவில்லை. உடனடியாக கைகளை உயர்த்திக் கத்தியபடி எனது துப்பாக்கியையும் காலையும் பிடிப்பதற்குத் திரும்பினான். ஆனால் அதற்குள் அவனது தலையில் துப்பாக்கியால் சுட்டு அவனது ஆயுதத்தைக் கைப்பற்றினேன்.

இந்த நேரத்திற்குள் ஜெகனும் எல்விற்ரனும் இராணுவத்தினரின் மோட்டார் எறிகணை நிலையில் இருந்த இரண்டு இந்திய இராணுவத்தினரையும் சுட்டுவிட்டு அவர்களுடைய மோட்டாரையும் அதற்குரிய எறிகணைகளையும் கைப்பற்றினர். அதுவரை எம்மால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களைச் சுதனிடமும் கணேசிடமும் ஒப்படைத்துவிட்டு முகாமின் மறுபக்கம் சென்றோம். அங்கு இருந்த இந்தியச் சிப்பாய் ஒருவனையும் சுட்டுவிட்டு அவனது ஆயுதத்துடன் கணேசிடம் வந்து ஆயுதத்ததைக் கொடுத்தோம்.

பின்னர் ஜெகனும் சுதனும் முகாமின் பின்புறமாக காந்தனுடைய அறையை நோக்கிச் சென்றனர். நானும் எல்விற்ரனும் கணேசிடம்



ஆயுதங்களைக் கொடுத்துவிட்டு முன்புறமாக வீழ்த்தப்படாமல் இருந்த தங்கேசினுடைய பகுதியை நோக்கிச் சென்றோம். அங்கு தங்கேசினுடைய அறையில் இருந்து மூவர் வெளியில் வந்து அறையின் ஓரத்தில் நின்று தாக்குதல் நடாத்திக்கொண்டு இருந்தனர். மற்றைய இருவரையும் வெளியில் வரவிடாமல் வாசலிற்கு முன்னால் உள்ள புளியமரத்தின் மறைவில் இருந்து அம்முகாமின் அதிகாரி அறை வாசலை நோக்கி எல். எம். ஜி. இனால் சுட்டுக்கொண்டு இருந்தான். உள்ளே உள்ள இரண்டு போராளிகளுக்கு உதவியாக வெளியில் நின்று நாங்கள் அவ் அதிகாரியை நோக்கிச் சுடத் தொடங்கினோம். அதனால் அவ் அதிகாரியின் முதுகில் பல குண்டுகள் துளைக்க உடனேயே மாண்டுபோனான். உள்ளே இருந்த இரண்டு போராளிகளும் உடனடியாக வெளியேறி அவர்களுக்கு என வழங்கிய காவலரண்களை அழித்தொழிக்கத் தொடங்கினர்.

அம்முகாம் எங்கும் துப்பாக்கிகளின் முழக்கமும் கைக் குண்டுகளின் பாரிய சத்தங்களும் காதுகளைச் செவிடாக்கின.

இதனிடையே முற்றாகக் கைப்பற்றப்படாமல் இருந்த தங்கேசினது பகுதியை நோக்கி எல்விற்ரனை உதவிக்கு அனுப்பினோம். ஆனால் நான் எதிர்பாராத விதமாக சென்று கொண்டிருந்த எல்விற்ரனை நோக்கி அவனிற்கு மிகவும் அருகில் இருந்த இந்திய இராணுவத்தினரின் எல். எம். ஜி. ஒன்று குண்டுகளைக் கக்கத் தொடங்கியது. இதனால் எவ்விற்ரன் அந்த இடத்திலேயே விழுந்து நிலையெடுத்துவிட்டான். எல். எம்.ஜி. காரனோ எனக்கும் தங்கேசிற்கும் இடை நடுவே அமைந்துவிட்டதால் என்னால் துப்பாக்கியினால் அதிகம் சுடமுடியாத ஓர் நிலையில் இருந்தேன். இதனால் அக்காவலரண் மீது சில சூடுகளைச் சுட்டுவிட்டு என்னிடம் இருந்த கைக்குண்டு ஒன்றை அக்காவலரண் மீது வீசினேன். அக்குண்டு காவலரணிற்குப் பின்புறமாக இராணுவத்தினரின் பாவனைக்காகப் போடப்பட்டிருந்த பாடசாலை மேசை ஒன்றின் மீது பட்டு வெளியிலேயே வெடித்துச் சிதறியது. இக்குண்டினால் உள்ளே இருந்த இராணுவத்தினர் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை. நான் கத்தியபடி கைக்குண்டினை வீசியதை அக்காவலரணில் இருந்த இரண்டு இந்தியச் சிப்பாய்கள் கண்டுவிட்டனர். உடனடியாக அவர்களின் கவனம் என்மீது திரும்பியது. அக்காவலரணிலிருந்து இரண்டு எஸ். எல். ஆர். உம் எல். எம். ஜி. உம் என்னை நோக்கி ஒரே நேரத்தில் சுடத்தொடங்கின.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இச்சூட்டில் இருந்து தப்புவதற்காக அருகில் இருந்த மரங்களுள் என்னை மறைத்துக் கொண்டேன். இருந்தபோதிலும் எனது தொடையில் சிறு காயம் ஒன்று ஏற்பட்டது. எல். எம். ஜி. இனை நோக்கி எனது துப்பாக்கியால் சுட்டேன். பின்னர் என்னை நோக்கி இரண்டு எஸ். எல். ஆர். துப்பாக்கிகளாலும் எல்விற்ரனை நோக்கி எல். எம். ஜி. இனாலும் தொடர்ந்து சுட்டபடி இருந்தார்கள். இந்த நேரத்தில் எனது தொடைக்காயத்திற்கு சாரத்தினைக் கிழித்துக் கட்டுப் போட்டுவிட்டு என்னிடம் எஞ்சி இருந்த அடுத்த கைக்குண்டினை எடுத்து கிளிப்பைக் கழற்றிய எனக்கு, இந்த எல். எம். ஜி. இனை விழுத்தாவிட்டால் எல்விற்ரனையும் இன்னும் பலரையும் பறிகொடுக்க வேண்டும் என்பதும் இதனால் இத்தாக்குதல் தோல்வியிலேயே முடியும் என்பதும் மிகவும் தெளிவாக விளங்கியது.

தொடர்ந்து அடுத்த நடவடிக்கையாக இராணுவத்தினர் எதிர்பாராத வேளை எதிர்பாராத விதமாக கைக்குண்டுடன் அவர்களை நோக்கி கத்தியபடி ஓடினேன், இதனை எதிர்பாராது திகைத்து நின்ற இந்திய படையினர் தம்மைச் சுதாகரிக்க முன்னர், இரண்டு எஸ். எல். ஆர். துப்பாக்கிகளையும் எனது இரண்டு கால்களால் மிதித்தபடி எல். எம். ஜி. இனை இறுகப் பற்றினேன். சில விநாடிகளுக்குள் நடந்துவிட்ட எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்த அவர்கள் அடுத்த நடவடிக்கை குறித்து எண்ண முன்னர் எனது கையில் இருந்த கைக்குண்டின் லிவரை அவர்கள் முன் பிடித்துக்கொண்டு மெதுவாகக் கைவிட்டேன்.

குண்டு வெடிக்கப் போகின்றது என்பதைக் கண்ட அவர்கள் மேலும் நிலைகுலைந்தனர். குண்டு இருந்த கையால் தோளில் தொங்கிய துப்பாக்கியை எடுத்து அவர்களைச் சுட்டேன். குண்டு கையில் இருந்ததால் சூடு தவறி எல். எம். ஜி. மீது பட்டு ஒருவனைக் காயப்படுத்தியது. இந்தியப் படையினர் முற்றாக நிலை குலைந்து நின்றனர். இந்த இடைவெளியில் குண்டைத் தூர எறிந்தேன்; பின் அவர்களைச் சுட்டுக்கொன்றேன்.

அப்போது அவர்களின் பின்னால் அதுவரை எஸ். எம். ஜி. உடன் பயந்து படுத்திருந்த இந்தியச் சிப்பாய் ஒருவன் எழுவதைக் கண்டேன். அவனையும் சுட்டு வீழ்த்தினேன். இவ்வளவு நிகழ்ச்சியும் சில விநாடிகளுக்குள் நடந்து முடிந்துவிட்டது. அவர்களது ஆயுதங்களைக் கைப்பற்றினேன்.



நான் வீசிய கைக்குண்டு வெடிக்காததால் அதனை நோக்கிச் சென்றேன். அக்கைக்குண்டோ மழையில் நனைந்தபடியால் பழுதடைந்து இருந்தது. இதனாலேயே அக்கைக்குண்டு வெடிக்க வில்லை. இவ் வெடிக்காத கைக்குண்டினால்தான் அம்முகாமின் முக்கிய காவலரண் ஒன்றில் இருந்த இந்தியச் சிப்பாய்களைப் பயமுறுத்தி அவர்களது உயிர்களையும் ஆயுதங்களையும் பறிக்க முயன்றதை நினைனத்து இப்போதும் ஆச்சரியப்படுவேன்.

பின்னர் நானும் எல்விற்ரனும் தங்கேசினுடைய பக்கம் சென்றோம். அங்கு அனைத்துக் காவலரண்களையும் அழித்துவிட்டு அங்கிருந்த சிப்பாய்களினது உடல்களை காவலரணிற்கு வெளியில் இழுத்து நிரையாக அடுக்கியபடி எமக்குரியது எல்லாம் கிளியர் பண்ணியாச்சா எனக் கேட்டுக் கொண்டே எங்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு நின்றார் தங்கேஸ்.

பின்னர் நாங்களும் தங்கேசினுடைய சிலபேருமாக காந்தனுடைய பக்கம் சென்றோம். அங்கு காந்தனும் தேவனும் கைகளில் காயமடைந்த நிலையில் இராணுவத்திடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களுடன் நின்றனர்.

நாங்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போது எமது போராளிகள் எல்லோரும் முகாம் முற்றாகக் கைப்பற்றப்பட்டு விட்டதாக முழக்கமிட்டுக் கத்தியவண்ணம் என்னை நோக்கி ஓடிவந்தார்கள். அவர்களிடம் அகப்பட்டால் என்னைத் தூக்கித் தோளில் வைத்து சந்தோசத்தில் கத்தி ஆரவாரம் செய்வார்கள் என்பதனால் நானும் தங்கேசும் அருகில் இருந்த கட்டிடங்களுக்குள் ஓடி ஒளிக்க எத்தனித்தோம் ஆனால் தப்பிக்க முடியவில்லை.

அந்நேரம் சந்தைப்பக்கமாக நின்ற ஒரு போராளி சுட்டபடியே ஆமிக்காரன் ஓடுறான்... என உரக்கக் கூவி எங்களை அழைத்தான் உடனடியாக அந்த இடத்திற்கு ஓடிச்சென்ற நாங்கள் எட்டுப்பேர் அச்சிப்பாயை நோக்கிச் சுட்டோம். ஆனால் ஒருவரது குண்டும் அச்சிப்பாயைத் தாக்கவில்லை அவன் அருகில் இருந்த பிரதான முகாமிற்குத் தப்பிச் சென்று விட்டான்.

இரண்டு மூன்று சிப்பாய்கள் இத்தாக்குதலின்போது தமது துப்பாக்கிகளைத் தூரவீசிவிட்டு முகாமிற்குள் குறுக்கும் நெடுக்குமாக எமது போராளிகளிடம் அகப்படாமல் ஓடித்திரிந்தனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இவர்களை எமது போராளிகளும் பின்னால் துரத்தித்தான் பார்த்தார்கள் ஆனால் பிடிக்க முடியவில்லை. இவர்களைச் சுட்டால் உள்ளே குறுக்காக நடமாடித் தாக்கியபடியுள்ள எமது போராளிகளையும் அது தாக்கக்கூடும் என்பதால் சுடாமலேயே துரத்திப்பிடிக்க எத்தனித்தனர். இவர்கள் துரத்தப்படும் போது எமது போராளிகளுடன் அவர்கள் ஒரு சில சமயங்களில் மோதுப்பட்டு விழுந்ததுண்டு பின்னர் அவர்கள் முட்கம்பி வேலியைத் தாண்டும் போது சுட்டு வீழ்த்தப்பட்டனர். அவர்கள் துரத்தப்படுவதைப் பார்த்தால் சிறுவயதில் அடித்துத் தொட்டு விளையாடுவது போல உள்ளதாக தங்கேஸ் கூறிச் சிரித்தார்.

பின்னர் நவத்தை எம்மிடம் வரும்படி வோக்கியில் கூறிவிட்டு நாங்கள் காவலரண்களைப் பார்ப்பதற்குச் சென்றோம். அங்கு இருந்தது இராணுவத்தினரின் உடல்கள் அனைத்தையும் ஓரிடமாக அடுக்கிவிட்டு கைப்பற்றிய ஆயுதங்களையும் ஓரிடமாக அடுக்கிக் கணக்குப் பார்க்கத் தொடங்கினோம்.

அதேவேளை நவமும் வந்து எம்முடன் சேர்ந்து கொண்டார். பதினொரு நிமிடங்களே நடந்த எமது தாக்குதலைப் பாராட்டி விட்டு காயக்காரரை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டார்.

அப்போது பிரதான முகாமில் இருந்து நாம் கைப்பற்றிய மினி முகாமை நோக்கி இராணுவத்தினர் பெரியளவில் படையெடுத்தனர். எனது காயத்திற்குக் கட்டுப்போட்டுக்கொண்டு கைப்பற்றிய ஆயுதங்களை எடுத்துக் கொண்டும் போராளிகள் அனைவரையும் கூட்டிக்கொண்டும் நாம் கைப்பற்றிய மினிமுகாமை விட்டு வெளியேறும் படி நவத்திடமும் தங்கேசிடமும் கூறிவிட்டு நானும் எல்விற்றனும் 10 போராளிகளுடன் முன்னேறும் இராணுவத்தினருடன் போரிடச் சென்றோம்.

நெடுங்கேணிச் சந்தியில் வைத்து முன்னேறிய இராணுவத்தினரை வழிமறித்துத் தாக்கினோம். அரை மணி நேரம் இடைவிடாது தாக்கி இராணுவத்தினரின் முன்னேற்றத்தினைத் தடுத்தோம். பின்னர் தாக்குதலை இடை நிறுத்திவிட்டு அவ்விடத்தில் இருந்து எம்மைப் பின்வாங்கும்படி நவத்திடமிருந்து கட்டளை வந்தது. நாங்கள் வந்த காரியம் வெற்றிகரமாக முடிந்ததனால் நாமும் உடனடியாகப் பின்வாங்கினோம்.



இத்தாக்குதலில் மினிமுகாமில் 19 இராணுவத்தினரும் உதவிக்கு வந்தவர்களில் 3 இராணுவத்தினருமாக மொத்தம் 22 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

28 இராணுவத்தினர் உள்ள இந்த மினி முகாமில் தாக்குதல் நடைபெறுவதற்கு முக்கால் மணி நேரத்திற்கு முன்பாகத்தான் 6 இராணுவத்தினர் வவுனியா பிரதான வீதியில் ரோந்து சென்றனர். இதனால் அவர்கள் இத்தாக்குதலில் அகப்படவில்லை.

ஆனால் அத்தாக்குதலில் சற்றும் எதிர்பாராத விதமாக பிரதான முகாமில் இருந்து முன்னேறிவந்த இராணுவத்தினரை வழிமறித்துத் தாக்கும்போது அவர்களது 60 எம். எம். மோட்டார் எறிகணை ஒன்று நவத்திற்கு மிகவும் அருகில் விழுந்ததால் அவர் காயமடைந்தார்.

லெப். கேணல் நவத்திற்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரியாத மக்களே கிடையாது. அங்குள்ள ஒவ்வொரு ஊரின் ஒழுங்கையும் மணலாற்றுக் காட்டில் உள்ள மரங்களும் நவத்திற்கு மிகவும் பழக்கமானவை.

தவறுதலான ஒரு விபத்தில் தன் ஒரு கையின் முன் பகுதியை இழந்த அவர் என்றுமே போராடச் சளைத்ததில்லை.

அவரில்லை என்றால் மணலாற்றில் எம்மால் நிலை கொண்டிருக்க முடியுமா? என்பது சந்தேகமே.

எல்லாவற்றிற்கும் மேலாக எம் தலைவரின் பாதுகாப்புக்கு மிகப்பெரிய அரணாக அவர் இருந்தார்.

மிகப் பெரிய வீரரும் உழைப்பாளியுமான அவர் இந்தியாவிற்குக் கொண்டு செல்லப்படும் வழியில் வீரமரணமடைந்தார்.

(ஈழநாதம் நாளிதழில் 29. 9. 92 – 3. 10. 92 வரை வெளியானது)

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

**இணைப்பு – 2**

# சோதனை அலைகளைத் தாண்டிய துணிவுப் படகு

**- சாரங்கி**

ஆம்! இன்று இவன் மேஜர் கிண்ணி; 10. 7. 92 அன்று இயக்கச்சியில் ஏற்பட்ட மோதலில் நெஞ்சில் குண்டை ஏந்தி வீரச்சாவைத் தழுவிக்கொண்டான்.

அவன் எம்மை விட்டு இவ்வளவு விரைவாகப் போனதிற்குக் காரணமான அந்த நெஞ்சுக்காயத்தை பார்வையிடும் எண்ணத்தில் அவனருகில் அமர்ந்து இருந்து அவன் போட்டிருந்த ரீ – சேட்டை உயர்த்திப்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பார்த்தபோது நான் அப்படியே உறைந்து போனேன் ஏனென்றால் மூன்று வருடத்திற்கு முன்னர் அவனுக்கு பல சிரமங்களின் மத்தியில் எந்த நெஞ்சுக் காயத்திற்குச் சிகிச்சைசெய்து மீள உயிர்ப்புக் கொடுத்தோமோ அதே காயத் தழும்பின்மேல் இம்முறையும் குண்டு பாய்ந்துள்ளது. ஆனால் இம்முறை வந்த குண்டு யமனின் வேகத்தில் வந்தபடியால் எங்கள் பிள்ளையின் இதயத்தினூடாக ஊடுருவிச் சென்றுவிட்டது.

1987 இல் இருந்து எமது மண்ணை இந்திய வல்லரசு ஆக்கிரமித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் நான் எனது வைத்திய சேவையை வல்வை அரசினர் வைத்தியசாலையில் செய்து கொண்டு அதே வேளையில் போராளிகளுக்கு – முக்கியமாக காயமடைந்து வரும் போராளிகளுக்கு – சிகிச்சையும் செய்து வந்தேன். இப்படித் தொடர்ந்து எனது சேவையைச் செய்து கொண்டிருக்கும் போது இந்திய இராணுவத்தின் கெடுபிடிகள் கொலைப் பயமுறுத்தல்கள் போன்றவை தொடர்ந்து எனக்கு இருந்த வண்ணமேயிருந்தன.

இப்படித்தான் 28. 5. 89 அன்று காலை நான் வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் நோயாளர்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது சொனி என்னிடம் வந்து அக்கா அவசரமாக ஒருவரைப் பார்க்கவேணும் சரியான சீரியஸாக இருக்கிறார் என்றான். வழமையாக நான் சிகிச்சைக்குப் போவது பகல் 12.00 மணிக்குப் பிறகுதான். அதுவரை காயமடைந்தவர்களுக்கு ஏதோவிதத்தில் தங்களால் ஆனவரை மருத்துவப் போராளிகள் சிகிச்சை செய்து விடுவார்கள். ஆனால் இன்று சொனி அவசரம் என்கிறான். நேரமோ காலை 9.00 மணி. என் முன்னால் 200 – 300 நோயாளர்கள் காத்துக்கொண்டிருக் கிறார்கள். அதைவிட ஒருபக்கம் பொலிகண்டி இராணுவ முகாம் மறுபக்கம் வல்வெட்டித்துறைச் சந்தியில் இராணுவ முகாம். இதற்கிடையில் எம்மிடையே எத்தனையோ எட்டப்பக் கண்கள். இவற்றையெல்லாம் ஒரு கணத்தில் மறந்து விட்டு சொனியை முன்னுக்கு அனுப்பிவிட்டு நான் ஒரு சிறு பையில் அவசர சிகிச்சைக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொண்டு ஓர் ஆதரவாளரின் சைக்கிளில் குறிப்பிட்ட ஒழுங்கையை அடைந்தேன். அங்கு ஏற்கனவே போயிருந்த சொனி என்னைக் கண்டவுடன் சைக்கிளை விட்டிறங்கித் தன் பின்னால் வரச்சொன்னான். அங்கிருந்து நான் அவன் பின்னால் ஓர் குச்சு ஒழுங்கையினுள் சென்ற போது அங்கு அம்மப்பா, ஜேம்ஸ் இன்னும் சில போராளிகள் சகலரும் ஆயுதம் தரித்த நிலையில். சகலரினது



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

முகங்களிலும் இனம் புரியாத வேதனை. நான் அவர்களுடன் மௌனமாகி இரண்டு மதில்களைத் தாண்டி கடற்கரை ஓரமாக அமைந்துள்ள ஓர் வீட்டின் பின்புறமாகப் புகுந்து வீட்டினுள் சென்று பார்த்தபோது அங்கு கிண்ணி படுக்க முடியாமல் திணறிக்கொண்டு சுவரில் சாய்ந்தபடி இருந்தான். என்னைக் கண்டவுடன் மிகச்சிரமப்பட்டு அக்கா என்னாலே ஏலாது எப்படியாவது மூச்சுவரப் பண்ணுங்க என்றான். என் நிலையோ மிக தர்மசங்கடமானது.

என்னிடமுள்ள மருத்துவ வசதிகள் உபகரணங்கள் போன்ற வற்றை வைத்து அவனின் நிலைக்கு சிகிச்சை செய்ய முடியாது. ஏனென்றால் காயம் இடது பக்க நெஞ்சில் பட்டு உள்ளுக்குள் ஊடுருவிச் சென்று நெஞ்சு புடைக்குழியினுள் இரத்தத்தை நிறைய நிரம்பவைத்துவிட்டது. அதனால் அவன் நிலை மிக மோசமாகி ஒரு பக்கநெஞ்சில் சுவாசம் முற்றாக ஸ்தம்பித்து விட்டது.

ஆகவே உடனடியாகச் செயற்பட்டு அவனின் மூச்சுத் திணறலைக் குறைப்பதற்குச் சிகிச்சை செய்தேன். சிகிச்சை செய்து கொண்டிருக்கும்போது என் மனதில் பல போராட்டங்கள். அதில் என் மனக் கண்ணில் முதற் தோன்றியவர் கிண்ணியின் தாய். கிண்ணியம்மா என்று சகல போராளிகளினாலும் அழைக்கப்படுபவர். கிண்ணிக்கு மட்டுமல்ல பல போராளிகளுக்கும் தாயாகத் திகழ்ந்தவர். அத்துடன் ஏற்கனவே ஒரு மகனை கப்டன் முரளியாக 1985 ஆம் ஆண்டு மயிலியதனை மினி முகாம் தாக்குதலில் அர்ப்பணித்தவர். அதற்கடுத்து இடம்கொடுத்து உணவூட்டி வளர்த்த சலாமை மேஜர் சலாமாக 1988 ஆம் ஆண்டில் இழந்தவர். இந்நிலையில் இவனும் இறந்து விட்டால்? என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அதற்கு மேலாக ஓர் உன்னத – திறமையான – உறுதியான போராளி இவன். இவனை எப்படி நாம் இழப்பது!

இவனை எப்படியும் காப்பாற்றவேண்டும் என்ற வேகம் என் மனதில் ஓர் யோசனையைத் தோற்றியது. அதைநான் ஜேம்ஸ் சொனியிடம் தெரிவித்தபோது அவர்கள் முதலில் மறுத்துவிட்டார்கள். நான் தெரிவித்த யோசனை என்னவெனில் அவனை உடனடியாக மந்திகை வைத்தியசாலைக்கு அனுப்பி அங்குள்ள சேர்ஜனின் மூலம் அவசர சத்திர சிகிச்சையைச் செய்துவிட்டு உடனடியாக ஆளை எம்மிடத்திற்குத் திரும்ப எடுத்து இரவு இந்தியாவுக்கு அனுப்புவோம்

என்பதாகும். ஆனால் அந்த நேரம் மந்திகை வைத்தியசாலையின் எல்லையில் பல காவலரண்கள்; அத்துடன் பெரியதொரு இராணுவ முகாம்; இந்நிலையில் இவனை எப்படி அங்கை அனுப்புவது? உடனடியாக இந்தியா அனுப்புவம் என்பது – ஜேம்ஸ் சொனியின் வாதம். ஆனால் நானோ இப்ப இப்படியே இந்தியா அனுப்பினால் அவனின் கதை கடலிலே முடிந்துவிடும். நாம் மூளையைப் பாவித்து செயல்பட்டால் ஒரு பிரச்சனையும் வராது என்றேன். இரு நிமிடம் மௌனப் போராட்டம். இறுதியில் என் முடிவே வென்றது. உடனடியாக எமது திட்டத்தைச் செயற்படுத்தினோம். கிண்ணிக்கு ஓர் அப்பாவை நியமித்தோம். அவருக்குப் பெயர் சூட்டினோம். பின்பு கிண்ணிக்குப் பெயர் சூட்டினோம். அப்பாவையும் அவனையும் ஒருவருக்கு ஒருவர் அறிமுகம் செய்து வைத்தோம். இப்போது கிண்ணிக்கு அப்பா தாயார். அதன்பின் அப்பாவுக்கும் மகனுக்கும் சேர்த்து எப்படிக்காயம் உண்டானது என்று கதை சொன்னோம். அதாவது " தண்ணி போடப்போன இடத்தில பொம்பிளைப் பிரச்சினையில் கத்தியால் குத்திப் போட்டாங்கள். வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனோம். அங்க அந்த அம்மா இஞ்சை ஏலாது மந்திகைக்குக் கொண்டு போங்க என்று துண்டு தந்திருக்கிறா " என்பதே நாம் சோடித்த கதையாகும். பின்பு துண்டில் கிண்ணி கத்தியால் குத்தப்பட்டதாக எழுதி அவனின் அப்பாவாக இருக்கும் பெரியவரிடம் கொடுத்து காரில் கிண்ணியை ஏற்றி இராணுவ சென்றிக்கூடாகவே மந்திகை வைத்தியசாலைக்கு எதுவித சந்தேகமும் ஏற்படாதவாறு அனுப்பிவிட்டோம்.

பி. ப 1.00 மணியளவில் அவனுக்கு வெற்றியாக சத்திரசிகிச்சை நடைபெற்று நெஞ்சுக் குழியில் இருந்து கணிசமான அளவு இரத்தம் எடுக்கப்பட்டுவிட்டது, முட்டும் ஓரளவு குறைந்துள்ளது என்பதை ஓர் ஆதரவாளர் மூலம் அறிந்த கொண்டோம்.

பி. ப. 4.00 மணியளவில் E.P.R.L.F இனால் வைத்தியசாலை தேடுதல் வேட்டைக்குள்ளானது. அவர்களுக்கு கிண்ணியின்மேல் ஒரு சிறு சந்தேகம். ஆனால் உறுதிப்படுத்த முடியவில்லை. ஏனென்றால் கிண்ணி காயப்பட்டது கள்ளுக்கொட்டில் சண்டைக் கத்திக்குத்தில் அல்லவா! என்றாலும் E.P.R.L.F இல் ஒருவனுக்கு கிண்ணியின் மேல் சந்தேகம் கொஞ்சம் கூடுதலாக ஏற்பட்டுவிட்டது. அடிக்கடி வந்து கிண்ணியின் பெயரையும் இடத்தையும் கேட்கத் தொடங்கி விட்டான். இதனால் கிண்ணிக்குப் பயம் பிடித்துவிட்டது. பி. ப. 5.00



மணியளவில் ஒரு துண்டில் தனது இக்கட்டான நிலையை எழுதி உடனடியாகத் தன்னை வந்து ஏற்றிச் செல்லுமாறு சொனிக்கு அனுப்பியிருந்தான். உடனடியாக அத்துண்டைச் சொனி என்னிடம் கொண்டு வந்து அக்கா பிரச்சினை இறுகிட்டுது. இப்ப கிண்ணியை எப்படி வெளியில் எடுப்பது என்றான். கடவுளே! என் நிலையோ கிணறு வெட்டப் பூதம் வந்த மாதிரி... உயிரைக் காப்பாற்றும் ஒரே நோக்குடன் நான் அனுப்ப இப்ப பிள்ளையின் உயிருக்கே ஆபத்து. ஏன் அவன் உயிருடன் பிடிபடலாம் என்ற பீதியும் கூட, வேறு என்ன செய்வது? ஒன்றுமே புரியவில்லை.

ஒன்றையும் யோசிக்காமல் அம்புலன்சை எடுத்துக் கொண்டு நான் போக முற்பட்டபோது எமது ஆதரவாளர் ஒருவர் " டொக்ரர்... அவசரப்பட்டு எல்லாத்தையும் குழப்பிடாதையுங்க நீங்க ஏற்கனவே நோட்டட் நீங்கள் போறது புத்தியல்ல " என்றார் அதன்பின்பு சொனியும் எமது ஆதரவாளர்களுமாகச் சேர்ந்து காருடன் சென்று பலதடவைகள் முயன்றார்கள் ஒன்றுமே பயனளிக்கவில்லை. இறுதியாக இரவு 8.00 மணி போல் ஈ. பி. ஆர். எல். எவ். காரர் போய்விட வைத்தியசாலையினுள் எப்படியோ புகுந்து ஏதோ விதத்தில் கிண்ணியைத் தூக்கி வந்துவிட்டார்கள். இப்போது கிண்ணி மீண்டும் வல்வெட்டித் துறையிலுள்ள ஓர் வீட்டில். நான் உடனே போய்ப் பார்த்தேன். ஓரளவு திருப்தியாக இருந்தது. ஆனால் இந்தியாவுக்கு உடனடியாக வண்டியில் கொண்டுபோவதற்கு அவன் நிலை தாக்குப்பிடிக்குமா என்பது பெரும் சந்தேகமாக இருந்தது. ஏனென்றால் நெஞ்சில் ரியூப் போட்டவர்கள் படுத்திருக்கும் கட்டிலைக் கொஞ்சம் அசைத்தாலே அவர்களுக்கு மூச்சுத்திணறும். இந் நிலையில் இவனை எப்படி இந்தியாவுக்கு... என்னால் நினைக்கவே முடியவில்லை. ஆனால் அனுப்பித்தான் ஆகவேண்டும். ஏனென்றால் வல்வெட்டித்துறை அடிக்கடி தேடுதல் வேட்டைக் குள்ளாகும் ஓர் இடம். நாளைக்கு எந்தப் பகுதியில் சுற்றி வளைப்போ எமக்குத் தெரியாது. ஆகவே அவனை அன்றிரவே இந்தியா கொண்டு போவதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டன. அப்போது நானும் அவனுடன் சேர்ந்து போவதாக முடிவெடுத்தேன். ஏனென்றால் இவ்வளவு ஆபத்துகளில் இருந்து காப்பாற்றிய இவனைக் கடலில் சாக விடமுடியாது என்பதே எனது நோக்கம். எனது விருப்பத்தைச் சொனிக்கும் ஜேம்சுக்கும் சொன்னேன். பின்பு எனது தாயாரிடமும் நிலைமையை எடுத்துரைத்துச் சம்மதத்தைப் பெற்றுவிட்டேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இரவு 7. 00 மணிக்கு சொனி வந்து ஓர் மறைவிடத்திற்கு வரும்படி சொல்லிவிட்டுச் சென்றான். நான் ஒரு ஆதரவாளரின்

சைக்கிளில் அங்கு போன போது ஜேம்ஸ் அருச்சுனா சொனி வேறும் பல போராளிகள் கடற்கரை நேருக்கு நின்றார்கள். வண்டி கிண்ணியை ஏற்றியபடி தயார் நிலையில் நின்றது. நானும் வண்டியில் ஏறினேன். எமது பயணத்தை இரவு 8.00 மணியளவில் ஆரம்பித்தேன்.

அரை மணித்தியாலம் கடலில் எமது வண்டி போயிருக்கும் எமது வண்டி சடுதியாக ஓர் வண்டியுடன் மோதுகிற அளவிற்குக் கிட்டப் போனபோது அதில் சிங்களக் குரல்கள் ஓ! நாம் நேவி போட்டுக்குக் கிட்ட வந்து நிற்கிறோம் அவன் வெளிச்சம் இல்லாமல் இருட்டில் கட்டிவிட்டு நின்றிருக்கிறான். சிந்திக்க நேரமில்லை. எமது திறமையான ஓட்டிகளின் புத்தி சாதுரியத்தினால் எமது வண்டி உடனடியாகத் திருப்பப்பட்டு அதன் நான்கு எஞ்சின்களும் முழு வேகத்தில் இரையத் தொடங்கின வண்டி பறக்கத் தொடங்கியது. நேவி துரத்திக்கொண்டே வந்தான். கிண்ணி வேதனையில் பயங்கரமாக அலறினான். " தன்னைக் கடலில் தூக்கியெறியுங்க " என்று கத்தினான். இந் நிலையில் ஓட்டி ஒருவர் " டொக்ரர் அம்மா கிண்ணிக்கு மேல் ஏறியிருந்து அமத்திப் பிடியுங்கோ " என்றார். நான் அப்படியே செய்தேன். ஒரு 5 நிமிட போராட்டம். எமது வண்டி அதே வேகத்தில் கரையை வந்து அடைந்தது பிறகென்ன பயணம் இடைநிறுத்தப்பட்டது.

எமக்கு மீண்டும் போராட்டம். இனி அவனுக்கு சீரியஸ் ஆக்கினால் என்ன செய்வது? கடவுள்மேல் பழியைப் போட்டுவிட்டு நானும் சொனியும் அருகில் இருந்தோம். இதற்கிடையில் அன்று இரவு அவனுக்கு வயிற்றோட்டம் தொடங்கிவிட்டது. ஆகவே வாயினால் ஒன்றும் அருந்தக் கொடுக்காமல் றிப் மூலம் அதில் சேலைன், குளுக்கோஸ் ஏற்றினோம். அடுத்த நாள் நண்பகல் வந்தது. இப்போது நேவி பருத்தித்துறைக் கடலில் படுத்துக் கிடக்கிறான். பகல் என்றால் பார்த்துப் பார்த்துப் போகலாம் என்றான் அம்மப்பா. எல்லோரும் அதற்குச் சம்மதித்து எமது பயணத்திற்கு மீண்டும் ஆயத்தமானோம். ஆனால் பகல் போவது என்றால் எனக்கு ஒரு சிக்கல். அந்த ஊரில் என்னை எல்லாருக்கும் தெரியும். அதனால் நான் இந்தியா போகும் கதை ஏதோ ஒருவிதத்தில் இந்திய இராணுவத்துக்கு தெரியவந்தால் நான் திரும்பி வந்து வேலை செய்வது என்பது இயலாத ஒன்றாகிவிடும். ஆகவே எனக்கு உருமறைப்புச் செய்து முக்காடு போட்டு ஒருவருக்கும் யார் என்று தெரியாமல் வண்டியில்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஏற்றுவோம் என்று முடிவெடுத்து அதை சொனி ஜேம்ஸ் இருவரும் செயலில் காட்டி எனக்கு முக்காடு போட்டு முகத்தை மூடி கைப்பிடியில் இழுத்துச் சென்று வண்டியில் ஏற்றிவிட்டார்கள். பி. ப. 3.00 மணியளவில் எமது பயணம் அமைதியாக ஆரம்பித்தது. ஆரம்பத்தில் வண்டி ஒரு எஞ்சினையும் போட முற்பட்டபோது கிண்ணியால் தாக்குப்பிடிக்க முடியவில்லை மூச்சு எடுக்கச் சிரமப்பட்டான். ஆகவே மீண்டும் ஒரு எஞ்சினிலே எமது பயணம் அமைதியாக – ஆறுதலாக போய்க்கொண்டிருந்தது. நாம் மிக மெதுவாகப் போனதால் கடலைக் கடக்கக் கிட்டத்தட்ட 8 மணித்தியாலங்கள் எடுத்தன.

வழமையாக காயக்காரர்களைக் கொண்டு செல்லும்போது ஆகக் கூடுதலாக 3 மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றதனால் எம்மவர் பிப 5.00 மணியிலிருந்தே அக்கரையில் காத்திருந்திருக்கிறார்கள். நாம் போய்ச்சேர்ந்த நேரமோ இரவு 11.00 மணி. நாம் கரையை அண்மித்ததும் வோக்கியில் தொடர்பு எடுத்தோம். உடனே வண்டியைத் திருப்பிக்கொண்டு பழையபடி நாட்டுக்குப் போங்க என்று வோக்கியில் பதில் வந்தது. என் இதயம் ஒரு கணம் நின்றுவிட்டது. இவ்வளவு ஆபத்தையும் தாண்டி வந்தும் இந்திய எல்லையைக் கண்டவுடன் அப்பாடா! இனி கிண்ணி பிழைத்திடுவான் என்று பெருமூச்சுவிட்டு ஒரு வினாடிகூட ஆகவில்லை. அதற்குள் இப்படி ஒரு பேரிடி. அந்த நிலையை வார்த்தையில் விபரிக்க முடியாது. நான் உடனே ஐயோ என்னையும் கிண்ணியையும் இறக்கி விட்டிட்டு நீங்க திரும்பிப் போங்க நான் எப்படியாவது அவனைக் காப்பாற்றுகிறேன் என்றேன். திரும்பப் பயணம் செய்ய என்னாலும் முடியாது அவனாலும் முடியாது. இப்பயணத்தில் கிண்ணி மட்டுமல்ல நானும் களைத்து விட்டேன். இரண்டு நிமிடத்தின் பின்பு மீண்டும் தொடர்பு கிடைத்தது. உடனடியாகக் கரைக்கு வரச்சொன்னார்கள். அந்த நேரம் எமக்கு இருந்த சந்தோசத்தை வார்த்தையில் சொல்லமுடியாது. நாம் கரையை அடைந்தபோது அங்கு நின்ற அருணா என் அருகில் வந்து " டொக்டர் அம்மா ஒரு கதையும் இருக்கக்கூடாது வாயே திறக்கக்கூடாது. கெதியாக வந்து வானில் ஏறுங்க " என்றான். நான் மௌனமாக விரைவாகச் செயற்பட்டு வானில் ஏறிவிட்டேன். என்னுடன் மூன்று தம்பிகள் ஏறினார்கள். நான் மெதுவாக அவர்களிடம் " ஏன் இன்னும் கிண்ணியை வண்டியில் இருந்து இறக்கேல்லை? அவனுக்குத்தான் தம்பி சீரியஸ் எனக்கு ஒன்றும் இல்லை " என்றேன். அதற்கு ஒரு தம்பி " நீங்க சும்மா இருங்க. எமக்குத்தெரியும் அவனைக் கொண்டுவர. முதலில் உங்களைக்

கொண்டுபோய்ச் சேர்க்கவேணும் அவனை எப்படியும் கொண்டு வருவோம்'' என்று சினந்தான். நான் மீண்டும் மௌனம். கதைக்கவே இல்லை. என்னை ஏற்றிய வாகனம் போய்க்கொண்டே இருந்தது. என்னுடன் இருந்த தம்பி தொடர்பு எடுத்துக் கொண்டே வந்தான். இடையில் சொன்னான், ''இனிப் பிரச்சனையில்லை கிண்ணியை ஏற்றிக்கொண்டு அவங்களும் றோட்டில் ஏறிவிட்டார்களாம். இனி வந்திடுவாங்கள்'' என்று. நாம் எமது பயணத்தை சென்னை நோக்கித் தொடர்ந்தோம். ஒரு அரை மணித்தியாலம் கழிந்திருக்கும். கிண்ணியின் வாகனம் எமது இடத்தை வந்து அடைந்தது. நான் உடனே இறங்கி கிண்ணியிருந்த வாகனத்தில் ஏறி கிண்ணியருகே சென்று அமர்ந்தேன். அப்போது அவன் முகத்தில் தோன்றிய லேசான சிரிப்பைப் பார்த்தவுடன் சந்தோசத்தினால் என் கண்ணில் நீர் நிரம்பியது. அவனுக்கு ஊசியைப் போட்டு விட்டு எமது பயணத்தை வெவ்வேறு பாதைகளில் தொடர்ந்து இறுதியாக அடுத்த நாள் பகல் 10.00 மணியளவில் சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள ஓர் வைத்திய சாலைக்கு ஒன்றாக வந்து சேர்ந்தோம். அங்கு மருத்துவமனையில் அவனை அனுமதித்துவிட்டு அதற்குப் பொறுப்பான டொக்டரிடம் போய்க் கதைத்து அவனின் நிலையை விரிவாகக் கூறிவிட்டு நான் மீண்டும் வல்வெட்டித்துறையை வந்தடைந்தேன்.

(1992 – கார்த்திகை மாத வெளிச்சம் சஞ்சிகையில் வெளி வந்தது.)

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மீள் வெளியீடு : அனைத்துலகச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்

விண்ணில் சுடரும் சூரியக் கதிரென
விழிகள் சிவந்தன; வேங்கை அணியினன்
மண்ணின் மீட்புக்காய், மலையென நிமிர்ந்தவன் !
மானப்பிறவி; மறத்தமிழ் வீரன் !
எண்ணிலடங்கா களம்பல கண்டவன்
எதிரிப் பாசறை எரித்துச் சிதைத்தவன் !
'கிண்ணி' எங்களின் நெஞ்சில் நிறைந்தவன்
கண்ணில் கலந்தவன்; காவியமானவன் !

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive